வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 02.05.2025 வெள்ளிக்கிழமை இதழ் : 123 பக்கங்கள் : 12







# தமிழ் அரசுக் கட்சியுடன் சேர்ந்து பயணிக்க தயார்!

## கஜேந்திரகுமார் எம்.பி. பகிரங்க அறிவிப்பு



யாழ்ப்பாணம், மே 02

தமிழ் அரசுக் கட்சி தவறான கொள்கையைக் கைவிட்டு - அந்தக் கட்சியை நிறுவிய தந்தை செல்வநாயகத்தின் கொள்கையின்படி நேர்மையாக பயணிக்க முன்வந்தால் - நாம் நிச்சயமாக அவர்களுடன் பேச்சு நடத்தி பொது இணக்கப்பாட்டுக்கு வந்து இணைந்து பயணிப்போம் - இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

11



உயர்பாதுகாப்பு வலயமாக இருந்த

## 40.7 ஏக்கர் காணிகளை விடுவித்தது இராணுவம்

யாழ்ப்பாணம், மே 02

இராணுவம் அறிவித்த உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்த தமிழ் மக்களுக்கு சொந்தமான 40.7 ஏக்கர் காணிகள் நேற்று வியாழக்கிழமை விடுவிக்கப்பட்டன.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவின் கீழ் வயாவிளானில் 20 ஏக்கர் காணிகளும் காங்கேசன்துறை - மாங்கொல்லையில் 15 ஏக்கர் காணிகளும் இதே போன்று, பருத்தித்துறை பிரதேச செயலர்

11

## கதிர்காம பாதயாத்திரை சந்நிதியிலிருந்து ஆரம்பம்

- சி. தில்லைநாதன் -

வடமராட்சி, மே 02

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கதிர்காம பாதயாத்திரை தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து நேற்று வியாழக்கிழமை ஆரம்பமானது.

காலை 7 மணியளவில் பாத யாத்திரைக்கான வேல் வைக்கப்பட்டு விசேட பூசை வழிபாடுகளின் பின்னர், ஆலய பூசகரால் பாதயாத்திரைக்கு

11

## காங்கேசன் - நாகை இடையே ஜூலையில் சரக்கு கப்பல் சேவை!

பயணிகள் கப்பல் கட்டணம் குறைப்பு

நாகபட்டினம், மே 02

காங்கேசன்துறை துறைமுகத்துக்கும் இந்தியாவின் நாகபட்டினத்துக்கும் இடையே சரக்கு கப்பல் போக்குவரத்து எதிர்வரும் ஜூலை 15ஆம் திகதியளவில் ஆரம்பிக்க வாய்ப்புகள் உள்ளன என்று சுபம் கப்பல் நிறுவனத்தின் தலைவர் சுந்தர்ராஜ் தெரிவித்துள்ளார்.

அத்துடன், காங்கேசன்துறை - நாகபட்டினம் பயணிகள் கப்பலின் கட்டணம்

11



தமிழின அழிப்பை நினைவுகூரும்:

## முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல் நேற்று ஆரம்பம்

கிளிநொச்சி, மே 01

தமிழின அழிப்பை நினைவுகூரும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல் கிளிநொச்சியில் நேற்று ஆரம்பமானது.

வன்னி இறுதிப் போரில் அரச படைகளால் தமிழ் மக்கள் வகைதொகையின்றி கொல்லப்பட்டனர். இந்த நாட்களில் போரில் அகப்பட்ட மக்கள் உண்ண உணவின்றி - மருந்தின்றி தமது உயிரை காப்பாற்ற உப்பு இல்லாத கஞ்சியை ஒருவேளை மட்டுமே அருந்தி வாழ்ந்தார்கள். தமிழின அழிப்பு நாளாகக் கடைப்பிடிக்கப்படும் மே 18ஆம் நாளில் இதனை நினைவுகூரும்

11

## காணி சுவீகரிக்கும் முடிவை அரசாங்கம் கைவிடவேண்டும்

சுமந்திரன் கூறுகிறார்

யாழ்ப்பாணம், மே 01

வழங்கிய வாக்குறுதிக்கு மாறாக வடக்கில் காணிகளை சுவீகரிப்பதை உடனடியாக அரசாங்கம் நிறுத்த வேண்டும். காணி சுவீகரிக்கும் வர்த்தமானியை உடனடியாக மீளப்பெற வேண்டும் - என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய

11

## உள்ளூராட்சி தேர்தலுக்கான ஏற்பாடுகள் யாழில் பூர்த்தி!

தெரிவத்தாட்சி அலுவலர் பிரதீபன்

யாழ்ப்பாணம், மே 02

எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகள் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் யாழ். மாவட்டத்தில் பூர்த்தியாகியுள்ளன என்று மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் ம. பிரதீபன் தெரிவித்தார்.

நேற்று அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே

11

## நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர சுவாமிகள் இறைபதமடைந்தார்!



யாழ்ப்பாணம், மே 02

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் (வயது 68) நேற்று இறைபதமெய்தினார்.

சுகயீனம் காரணமாக கொழும்பில் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த நிலையில் நேற்று வியாழக்கிழமை இரவு 9.30 மணியளவில் அவர் இறைபதமடைந்தார்.

அமரரின் பூதவுடல் இன்றைய தினம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்பட்டு இன்று மாலையில் அவரின் இறுதிக்கிரியைகள் நடைபெற்று சமாதியில் வைக்கப்படும் என்று தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

11



## எங்களுக்கு அவகாசம் தாருங்கள்!

கொழும்பு, மே 02

“அற்பவிடயங்களுக்காக போராட வேண்டாம். ஓர் அரசியல் சக்தியாக அரசமைப்பு, வர்த்தமானிகள்,

11



ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்தியின் மே தினக்கூட்டத்தில் நேற்று காலிமுகத் திடலில் திரண்ட மக்கள் கூட்டம்...!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் யாழ்ப்பாணத்தில் மே தின பேரணி!




யாழ்ப்பாணம், மே 02

தொழிற்சங்கங்கள், வெகுஜன மற்றும் சிவில் அமைப்புகளுடன் இலங்கை ஆசிரியர் சங்கம் இணைந்து நடத்திய கூட்டு மே தின பேரணி நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்தில் ஆரம்பமான பேரணி நகரப் பகுதியூடாக பயணித்து யாழ். பொது நூலகம் முன்பாக நிறைவுபெற்றது.

பேரணியில் பங்கேற்றவர்கள் "தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரி", "அதிபர், ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர்களின் சம்பள முரண்பாட்டை உடணடியாக நீக்கு", "மலையகத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளத்தை வழங்கு", கடற்றொழிலாளர் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு தீர்வை வழங்கு", விவசாயிகள் எதிர்நோக்கும் உற்பத்தி, சந்தைப்படுத்தல் தொடர்பான பிரச்னைகளுக்கு தீர்வு வழங்கு", உள்ளிட்ட கோரிக்கைகளை கோஷங்களாக எழுப்பியிருந்தனர். (ஐ)

# சர்வதேச சைவசித்தாந்த மாநாடு நாளை சென்னையில் ஆரம்பம்!

யாழ்ப்பாணம், மே 02

அகில உலக சைவ சித்தாந்த 6ஆவது மாநாடு நாளை சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறவுள்ளது.

சென்னையிலுள்ள எஸ். ஆர். எம். பல்கலைக்கழகத்தில் நடைபெறும் இந்த மாநாட்டை தமிழ்நாட்டின் தருமபுரம் ஆதீனமும் எஸ். ஆர். எம். பல்கலைக்கழகமும் இணைந்து நடத்துகின்றன.

இலங்கையிலிருந்து கலாநிதி ஆறு. திருமுருகன், சிவசிறீ க. வைத்தீஸ்வர குருக்கள் ஆகியோர் இந்த மாநாட்டுக்கு ஆசியுரைகளை வழங்கவுள்ளனர். அத்துடன், பலரும் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பிக்கவுள்ளனர்.

இந்த மாநாட்டில், பல்வேறு சைவ ஆதீனங்களின் மடாதிபதிகள், சைவ சித்தாந்த அறிஞர்கள், தமிழ் மொழி ஆர்வலர்கள், ஆய்வுக் கட்டுரையாளர்கள், அரசியல் தலைவர்கள் எனப் பலர் கலந்துகொள்ளவுள்ளனர். இதன்போது, 300இற்கும் மேற்பட்ட சைவ சித்தாந்த ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வு செய்யப்படவுள்ளன. அத்துடன், சைவ சித்தாந்தம் தொடர்பான 75 புதிய நூல்கள் வெளியீடு செய்யப்படவுள்ளன. 8 அறிஞர் பெருமக்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# தமிழ் அரசு கட்சியின் மே தின எழுச்சி கூட்டம்



யாழ்ப்பாணம், மே 02

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மே தின எழுச்சிக் கூட்டம் நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

கட்சியின் பதில் தலைவரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சீ. வீ. கே. சிவஞானம் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான இந்தக் கூட்டத்தில், கட்சி தலைவர்கள் உரையாற்றினர். அத்துடன், சில தீர்மானங்கள் இயற்றப்பட்டதுடன் எழுச்சிக் கூட்டம் நிறைவடைந்தது.

இந்த நிகழ்வில், கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் உள்ளிட்ட கட்சியின் முக்கியஸ்தர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களஈ உள்ளூராட்சி வேட்பாளர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)

# கதிர்காமம் பாத யாத்திரை குழுவினருக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் நிதியுதவி!

வடமராட்சி, மே 02

கதிர்காமம் பாத யாத்திரை குழுவினருக்கு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் ஆசீர்வாதம் வழங்கியதுடன், பயண வழிச் செலவாக ஒரு தொகை நிதியையும் வழங்கி வைத்தார்.

வரலாற்று சிறப்பு வாய்ந்த கதிர்காமம் பாத யாத்திரை நேற்று தொண்டைமானாறு செல்வசந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து ஆரம்பமானது.

பாத யாத்திரையை ஆரம்பித்த குழுவினர் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்ற விசேட பூசை வழிபாடுகளில் பங்கேற்றனர். அத்துடன், அவர்களுக்கு காலை ஆகாரமும் ஒரு தொகை நிதியும் வழங்கி சந்நிதியான் ஆச்சிரமத்தின் மோகன



தாஸ் சுவாமிகள் ஆசீர்வாதமும் வழங்கினார்.

இந்த பாத யாத்திரை கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மொனராகலை மாவட்டங்கள் ஊடாக 815 கிலோமீற்றர் தூரத்தைக் கடந்து கதிர்காமம் ஆலயத்தை சென்றடையும் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ-02)

## யாழ். போதனா மருத்துவமனை:

# பாதுகாப்பு ஊழியர்கள் நேற்று வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம், மே 02

யாழ். போதனா மருத்துவமனையின் பாதுகாப்பு ஊழியர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

சம்பள உயர்வு கோரியும் போதனா மருத்துவமனையின் பாதுகாப்பு ஊழியர்களை பிறிதொரு நிறுவனம் பொறுப்பெடுக்கும் நிலையில் அந்த நிறுவனம் உரிய முறையில் தம்மை உடனடியாக பொறுப்



பெடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பாதுகாப்பு ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பால் மருத்துவமனைக்குள் நோயாளர்களை பார்வையிட வருவோர் கட்டுப்பாடின்றி விடுதிகளுக்குள் சென்றனர் என்றும் இதனால், நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர் எனவும் அறிய வருகிறது. (ஐ)

# இ. போ. ச. மன்னார் சாலையின் குறைபாடுகள் குறித்து அவதானம்!

## இ. போ. தலைவர் நேரில் சென்று ஆய்வு

மன்னார், மே 02

இலங்கை போக்குவரத்து சபையின் மன்னார் சாலையின் நிலைமை தொடர்பில் ஆராய்வதற்காக இ. போ. ச. தலைவர், ஜெகதீஸ்வரன் எம். பி. ஆகியோர் கண்காணிப்பு பயணம் ஒன்றை மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட இந்த கண்காணிப்பு பயணத்தில், தாழ்வுபாடு பிரதான வீதியில் அமைந்துள்ள இ. போ. ச. மன்னார் சாலையில் பராமரிப்பின்றிய நிலையில் காணப்படும் வாகனங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டன. உதிரிப்பாகங்கள் பல வருடங்களாக கொள்வனவு செய்யப்படாமையால் இந்த நிலைமை ஏற்பட்டதாக நிர்வாகம் அவர்களுக்கு சுட்டிக்காட்டியது.

இதேநேரம், மன்னார் மாவட்டத்தில் இருந்து தூர இடங்களுக்கான சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளன. அத்துடன், அந்தப் பகுதிகளுக்கு இயக்கப்பட்ட பழுதடைந்த பேருந்துகள் தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டன.

இதன்போது, ஜெகதீஸ்வரன் எம். பி. ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்,

மன்னார் பொது போக்குவரத்து சாலையில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன. விரைவில் அவற்றை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். இதே நேரம் பழுதடைந்த பேருந்துகளை மீள் பயன்பாட்டுக்கு கொண்டு வருவதற்கு உதிரிப் பாகங்கள் விரைவில் வழங்கப்படும். அத்துடன், எஞ்சின்கள் திருத்தப்பட்ட 5 பேருந்துகள் கையளிக்கப்படும் - என்றார்.

இதனிடையே, மன்னார், முல்லைத்தீவு பேருந்து சாலைகளின் செயல்பாடுகள் மிக மோசமாக உள்ளன என்றும் பல கோடி ரூபாய் பெறுமதியான அரச சொத்துகள் விரயமாகின்றன எனத் தொடர்ச்சியாக கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில் இந்த கண்காணிப்பு பயணம் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# மாதனை கற்பகப்பிள்ளையார் பெருந்திருவிழா

வடமராட்சி, மே 02

பருத்தித்துறை மாதனை அருள்மிகு கற்பக பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா கொடியேற்றத்துடன் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

இந்தப் பெருந்திருவிழாவில் எதிர்வரும் 7ஆம் திகதி புதன்கிழமை மாலை 7 மணிக்கு சப்பை ரதத் திருவிழாவும் மறுநாளான வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் அடுத்தநாள் வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

அளவெட்டியை சேர்ந்த சிவசிறீ சுதர்சனக் குருக்கள் பிரதம குருக்களாக இருந்து இந்தப் பெருந்திருவிழாவை நடத்தி வருகிறார். (ஐ-02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
02.05.2025 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், சித்திரை 19

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## புலம்பெயர் 'லொபி'க்கு என்ன நடந்தது?

ஐரோப்பிய ஒன்றியம் ஆடை ஏற்றுமதிக்கான வரிச் சலுகையை நீக்கினால் தற்போதைய நிலையில் இலங்கை பொருளாதார ரீதியில் பெரும் நெருக்கடியை சந்திக்கும் என்பதில் சந்தேகமில்லை. அரசாங்கம் நிலைகுலைந்தும் போகக்கூடும். ஆனால், வரிச்சலுகையை மீண்டும் வழங்குவது தொடர்பில் சாதகமான நிலைமையே காணப்படுகிறது. பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கும் விடயத்தில் முன்னேற்றங்களை காண்பிக்கும் நிபந்தனைகள் இருந்தபோதிலும்கூட, யுத்தம் முடிவுற்று பதினைந்து ஆண்டுகளில் ஆட்சியிலிருந்தவர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கவில்லை. அதனை நீக்காமலேயே மிகவும் வெற்றிகரமாக உலகை எதிர்கொண்டனர் - எதிர்கொண்டு வருகின்றனர்.

கடந்த பதினைந்து வருடங்களாக, இலங்கைமீது, மனித உரிமைகள் சார்ந்து அழுத்தங்கள் இருக்கின்றன என்று தமிழர் தரப்பில் - முக்கியமாக புலம்பெயர் சூழலில் கூறப்பட்டபோதிலும்கூட, மனித உரிமைகள் மீறலுக்கான பொறுப்புக்கூறலில் அரசாங்கங்கள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய முன்னேற்றங்கள் எதனையும் இதுவரையில் நிரூபிக்கவில்லை. எவ்வாறு கொழும்பால் இந்த விடயத்தை சாதாரணமாக தாண்டிச் செல்ல முடிகிறது - தொடர்ந்தும் சமாளித்துக் கொண்டே இருக்க முடிகிறது?

இந்த நிலையில், புதிதாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கின்ற தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், தாங்கள் புதிதாக வந்தவர்கள் - விடயங்களை நடைமுறைப்படுத்த தங்களுக்கு அவகாசம் தேவை என்னும் அடிப்படையில் உலகை எதிர்கொள்ள முயற்சிக்கின்றனர். அதில், அவர்கள் முன்னோக்கியும் செல்கின்றனர். ஆனால், பொறுப்புக்கூறல் தொடர்பில் எவ்வித முன்னேற்றங்களும் இல்லாமலேயே காலம் நகர்ந்து செல்கிறது. இந்த இடத்தில் எழும் கேள்வி, அழுத்தங்களை ஏற்படுத்தப் போவதாகக் கூறிய புலம்பெயர் 'லொபி' க்கு என்ன நடந்தது - என்ன நடக்கிறது?

யுத்தம் நிறைவுற்றதன் பின்னரான காலப்பகுதியில் புலம்பெயர் அமைப்புகள் தங்களை அதிகம் ஆற்றல்மிக்க அமைப்புகளாகக் காண்பித்திருந்தன. யூதர்களுக்கு அடுத்த பலமான புலம்பெயர் சமூகமாக தங்களை காண்பித்துக் கொண்டனர். ஐரோப்பிய நாடுகளில் சுமார் பத்து இலட்சத்துக்கும் அதிகமாக சிதறிவாழும் ஈழத் தமிழர் சமூகமானது சில நாடுகளில் அரசியல் சமூகமாகவும் மாறியிருக்கிறது.

குறிப்பாக, கனடாவில் செல்வாக்குள்ள அரசியல் சமூகமாக ஈழத்தமிழர் வளர்ச்சியுற்றிருக்கின்றனர். இவ்வாறான விடயங்களை அடிப்படையாகக் கொண்டே ஈழத் தமிழ் சமூகம் ஒரு பலமான புலம்பெயர் செல்வாக்கை கொண்டிருப்பதான தோற்றம் உருவாகியது. ஆனால், உண்மையிலேயே புலம்பெயர் தமிழர் லொபி தாக்கம் மிக்கதாக இருந்ததா - அவ்வாறு இருக்க முடியுமா என்னும் கேள்வியை முன்வைத்தால் பதில் இல்லை என்பதாகவே இருக்கிறது - இதுவரையான நிலைமை இதுதான்.

ஈழத் தமிழர் புலம்பெயர் லொபி உண்மையிலேயே தாக்கம்மிக்கதாக இருந்திருக்கிறது என்றால் ஐரோப்பிய ஒன்றியத்தின் முக்கிய நிபந்தனையாக இறுதி யுத்தம் தொடர்பிலான பொறுப்புக்கூறல்தான் இருந்திருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு நிகழவில்லை. ஈழத் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் புலம்பெயர் சமூகம் என்பது அரசியல் ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் ஒரு பலமான மையமாக இருக்குமென்னும் எதிர்பார்ப்பு இன்றுவரையில் ஈடேறவேயில்லை. ஏன் இது நடைபெறவில்லை என்பது தொடர்பில் புலம்பெயர் அமைப்புகள் தங்களை இனியாவது மீள் பரசீலனை செய்ய வேண்டும்.

# உள்ளூராட்சிகளின் அதிகாரங்கள் குறித்து அரச தரப்புக்கு அறிவில்லை!

### ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி

யாழ்ப்பாணம், மே 02

"உள்ளூராட்சி முன்மொழிவுகளை கண்மூடிக் கொண்டு அனுமதிப்பது என்றும் அபிவிருத்தி சம்பந்தமான நிதி ஒதுக்கீடுகளை பற் றியும் அரச தரப்பினர் வாய்க்கு வந்தபடி பேசித் திரிகிறார்கள் - இவ்வாறு விமர்சித்துள்ளார் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் தேசிய அமைப்பாளர் கு.சுரேந்திரன்.

நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார். மேலும்,

"முதல் தரம் அரசாட்சியில் இருப்பதாலோ என்னவோ மத்திய, மாகாண, உள்ளூராட்சி அதிகாரங்கள் என்ன என்பதை அவர்கள் அறிந்திருக்க வாய்ப் பில்லை. உள்ளூராட்சி முன்மொழிவுகள் ஜனாதிபதியிடமோ, அமைச்சர்களிடமோ செல்வதில்லை என்பதை அவர்கள் எதிர்வரும் காலங் களில்தான் அறிந்து கொள்ள வாய்ப்பு இருக்கிறது. பிரதானமாக உள்ளூராட்சி சபைகள் மாகாண சபைகளின் அதிகார வரம்புக்கு உட்பட்டவை. இதை முதலில் ஆட்சியாளர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

உள்ளூராட்சி சபைகள், தாங்கள் மக்களிடம் பெற்றுக் கொள்கின்ற நிதியிலிருந்து தங்களுடைய திட்ட வரைவுகளையும் முன்மொழிவுகளையும் தமது சபையிலே சமர்ப்பித்து அனுமதியை பெற்றுக் கொள்கிறார்கள். அதன் அடிப்படையில்தான் அபிவிருத்திகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அரசு தரப்பு சொல்கின்ற கருத்துகளில் இருக்கக்கக் கூடிய அபாயத்தை தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். அரச தரப்பின் கைவசம் வரும் உள்ளூராட்சி சபைகள் மத்திய அரசிடமே அனுமதிகளையும் முன்மொழிவுகளையும் பெற்றுக் கொள்ள வேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்படுவார்கள். அந்த நிலை ஏற்பட்டால் எமது உள்ளூராட்சி சபைகளுக்கான நோக்கங்கள் தவறாக வழி நடத்தப்படும். இதில், நமது மக்கள் எச்சரிக்கையாக இருந்து நமது வேட்பாளர்களுக்கு ஆதரவளித்து சபைகளை பலப்படுத்துவதன் மூலமே நிலைபேறான அபிவிருத்தியை எமது பிரதேசங்களில் முன்னெடுக்க முடியும்", - என்றுள்ளது. (ஐ)

# இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம், மே 02

அச்சுவேலி வடக்கு, சரசாளி அருள்மிகு சித்திர வேலாயுதர் ஆலய கொடியேற்றத்தை ஒட்டி "மிளிர்ந் தருள்பவனே" என்ற பக்தி பாடல் இறுவட்டு இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு வெளியிடப்படவுள்ளது.

நா. சிவராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஆசியுரையை ஆலய பிரதம பூசகர் இ. நித்திய கஜேந்திரன் வழங்குவார்.

வெளியீட்டுரையை சைவ புலவர் கி. வரதராசனும் மதிப்பீட்டுரையை செந தமிழ்ச்சொல்லருவி சந்திர மௌலீசன் லலீசனும் வழங்குவர். இசையமைப்பாளர் சிவா. பத்மஜன் மற்றும் பாடலாசிரியர் சு. சிறீகாந் ஆகியோர் ஏற்புரை ஆற்றுவர்.

# 346 பேர் சுற்றிவளைப்பில் கைது!

கொழும்பு, மே 02

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் போதைப் பொருட்களுடன் 346 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, ஐஸ் போதைப் பொருளுடன் 124 பேரும் ஹெரோயினுடன் 114 பேரும் கஞ்சாவுடன் 104 பேரும் கஞ்சா செடிகளுடன் 4 பேரும் கைது செய்யப்பட்டனர். கைதானவர்களிடமிருந்து,127 கிராம் 384 மில்லி கிராம் ஹெரோயின், 173 கிராம் 236 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள், 730 கிராம் 024 மில்லிகிராம் கஞ்சா, 35 ஆயிரத்து 784 கஞ்சா செடிகள் கைப்பற்றப் பட்டன என்றும் தெரிவிக் கப்பட்டது.

(ஐ)

# முன்னாள் ஜனாதிபதிகளுக்கு தொலைபேசிகளும் குறைப்பு

கொழும்பு, மே. 02

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட 4 தொலைபேசிகளில் 3 குறைக்கப்பட்டுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்படி, ஒரு முன்னாள் ஜனாதிபதிக்கு தற்போது ஒரு தொலைபேசி மட்டுமே வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஊழியர் ஒருவரிடம் வினவிய போது,

முன்னாள் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட 4 தொலைபேசிகளில் 3 தொலைபேசிகள் அகற்றப்பட்டுள்ளன என்று அவர் உறுதிப்படுத்தி னார்.

ஊழியர்களின் எண்ணிக்கையும் குறைவாக இருப்பதாகவும் அதிகாரபூர்வ வாகனங்களின் எண்ணிக்கையும் இரண்டாகக் குறைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்படும் பல்வேறு வசதிகளை குறைக்க தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அண்மையில் முடிவு செய்தது. அதன்படி இந்த வசதிகள் அகற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மே - 02 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம் - சித்திரை 19
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : பஞ்சமி




**மேடம்**
துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத் தீரும். உங்கள் கருத்துக்கு ஆதரவு பெருகும். தைரியம் கூடும்.

**இடபம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். நேர்மறை எண்ணங்கள் பிறக்கும். புது நட்பு மலரும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**மிதுனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் அனாவசிய பேச்சை தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் சச்சரவுகள் வரும். ரகசியங்களை வெளியிடவேண்டாம்.வளைந்துகொடுக்கவேண்டும்.

**கடகம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் மறைமுக தொந்தரவுகள் வந்து நீங்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**சிம்மம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். வியாபா ரத்தை பெருக்குவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். லாபம் பெருகும் நாள்.

**கன்னி**
உங்கள் போக்கில் கொஞ்சம் மாற்றம் செய்வீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார். சாதித்துக் காட்டும் நாள்.

**துலாம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். உங்கள் உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எந்த காரியத்தை தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க சூழ்நிலை உருவாகும். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

**தனுசு**
கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். சகோதரர் வகையில் உதவிகள் கிடைக்கும். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். சக ஊழியர்களால் ஆதாயமும் உண்டு.

**மகரம்**
கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உறவினர், நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும்.அதிகாரிகள் முன் வைத்த கோரிக்கைகள் நிறைவேறும்.

**கும்பம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். நீண்டநாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். அக்கம் - பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். சக ஊழியர்கள் உதவுவார்கள்.

**மீனம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். சகோதரி உதவுவார். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். வியாபாரம் தழைக்கும். நன்மை கிட்டும்.

# கீரிமலையில் இடையூறு இன்றி பிதிர்க்கடன்; கடற்கரையில் கற்களை அகற்ற நடவடிக்கை

## 35 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், மே 02

கீரிமலையில் இடையூறு இன்றி பிதிர்க்கடன் நிறைவேற்ற கடற்கரையில் உள்ள கற்களை அகற்ற நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டில் நிறைவேற்றவுள்ள சுற்றுலாத்துறை அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் யாழ்ப்பாணம் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் தலைமையுரையாற்றிய பதில் அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு இவ்வாண்டு 131. 20 மில்லியன் ரூபாய் நிதி வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சால் ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறினார். இவ்வாறு, ஒதுக்கீடு செய்யப் பட்ட நிதியை உரிய காலத்துக்குள் பயன்படுத்தி திட்டங்களை நிறைவேற்றி முடிக்குமாறும், திட்டங்கள் நிலைத்திருக்கக்கூடிய வகையில் அமைந்திருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். திட்டங்களை அமுல்படுத்திய பின்னர் அதனைச் சரியான முறையில் பராமரிக்கும் பொறிமுறையையும் பேண வேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேலும் காரைநகர், தெல்லிப்பழை மற்றும் ஊர்காவற்றுறை பிரதேச சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பில் பதில் அரசாங்க அதிபர் தலைமையில் பின்வரும் விடயங்கள் ஆராயப்பட்டன.

1. கீரிமலை கடற்கரை பகுதியில், பிதிர்க்கடன் நிறைவேற்றும் செயல்பாட்டுக்கு இடையூறாக உள்ள கற்களை அகற்றி பாதுகாப்பான முறையில் பிதிர்க்கடன் மேற்கொள்வதற்கான பொருத்தமான செயல்பாடுகள் தொடர்பில் ஆராயப்பட்டதுடன், கடற்கரையில் காணப்படும் கற்களை அகற்றி கடற்கரையை சீர் செய்வதற்காக பதில் அரசாங்க அதிபரின் கோரிக்கைக்கு அமைவாக 35 மில்லியன் ரூபாய் நிதி அமைச்சால் விடுவிக்கப்பட்டுள்ளதால், அந்தத் திட்டத்தை சிறப்பாகவும் விரைவாகவும் நிறைவேற்றுவது தொடர்பில் ஆராயப்பட்டது. அத்தோடு, சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு உரிய அறிவுத்தல்கள் வழங்கப்பட்டன. மேலும், காங்கேசன்துறை கடற்கரையில் அமைந்துள்ள சிறுவர் பூங்காவின் ஒரு பகுதி கடல் அரிப்பால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, அதனை புனரமைப்பு செய்வது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

2. காரைநகர் கசூரினா கடற்கரையை சிறந்த வசதிகள் கொண்ட கடற்கரையாக மாற்றுவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிக்கு அமைய, நேரடியாக சம்பந்தப் பட்ட திணைக்களங்களுடன் இணைந்து களவிஜயம் செய்து அபிவிருத்தித் திட்டங்களை ஆராய்வது எனவும் தீர்மானிக் கப்பட்டது.

3. தீவக சுற்றுலாத் தலங்களை மேம்படுத்தும் வகையில், ஊர்காவற்றுறை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பாக குறிப்பாக அனலைதீவிலுள்ள புளியன்தீவு படகுத்துறை, ஊர்காவற்றுறை கண்ணகி அம்மன் படகுத்துறை புனரமைப்பு தொடர்பாகவும், ஊர்காவற்றுறை படகுத் துறைப் பகுதியில் மரம் நாட்டி சுற்றுலாப் பயணிகள் அமர இருக்கைகள் அமைப்பது தொடர்பாகவும் ஆராயப் பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி) க. சிறீமோகனன், திட்டமிடல் பணிப்பாளர் இ. சுரேந்திரநாதன், பிரதம பொறியியலாளர் க. திருக்குமார், தெல்லிப்பழை, காரைநகர், ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர்கள், பிரதேச சபை செயலாளர்கள் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் சுற்றுலாத்துறையுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர். (எ-05)

# வட்டுக்கோட்டையில் சிறுமி துஷ்பிரயோகம் மேலுமொரு நபர் பொலிஸாரிடம் சிக்கினார்

## இரு பெண்கள் உட்பட ஐவர் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், மே 02

வட்டுக்கோட்டையில் சிறுமியை தவறான நடத்தைக்கு உட்படுத்திய முக்கிய நபர் கைது!

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொல்புரம் பகுதியில் வசித்து வரும் 14 வயது சிறுமி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் தவறான நடத்தைக்கு உட்படுத்திய இரண்டு பெண்கள் உட்பட ஐந்து பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், குறித்த சிறுமியை தவறான நடத்தைக்கு உட்படுத்திய மேலுமொரு முக்கிய நபரை நேற்று முன்தினம் இரவு வட்டுக்கோட்டை பொலிஸார் கைது செய்தனர்.

குறித்த பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி கொஸ்தா தலைமையிலான குழுவினர் சென்று இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர். இந்தச் சம்பவம் குறித்து இதுவரை அறுவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

# யாழில் வீதியில் சென்ற முதியவர் திடீரென மயங்கி விழுந்து மரணம்

யாழ்ப்பாணம், மே 02

யாழ்ப்பாணம் - கோண்டாவில் பகுதியில் நேற்று முன்தினம் வீதியால் பயணித்த முதியவர் ஒருவர் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்தார். கோண்டாவில் கிழக்கு பகுதியைச் சேர்ந்த கந்தசாமி கலியுகவரதன் என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

காலை உணவு அருந்தாமல் வெளியே சென்ற முதியவர் மதியம் கோண்டாவில் வீதியால் பயணித்தவேளை திடீரென மயங்கி விழுந்தார்.

பின்னர் அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (எ-05)

# கூரையிலிருந்து வீழ்ந்த குடும்பஸ்தர் மரணம்

யாழ்ப்பாணம், மே 02

புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் கூரை வேய்வதற்கு சென்று கீழே விழுந்து படுகாயமடைந்தார். இந்த நிலையில், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார். 8 ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த ஜோர்ஜ் அன்ரனிதாஸ்(வயது -40) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த நபர் கடந்த 20ஆம் திகதி கூரை வேய்வதற்கு சென்றார். இதன்போது தவறுதலாக கூரையிலிருந்து விழுந்த நிலையில் புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து மாஞ்சோலை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

பின்னர் அன்று மாலை யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் மாலை உயிரிழந்தார். இவரது மரணம் குறித்து திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி.எஸ்.பி. சலுகைக்கு இலங்கை மீண்டும் விண்ணப்பிக்க நேரும்!

## ஹர்ஷ டி சில்வா எச்சரிக்கை



கொழும்பு, மே. 02

**ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகைக்கு மீண்டும் விண்ணப்பிக்க வேண்டியிருக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.**

குறித்த வரிச் சலுகையின் மீளாய்வுக்காக இலங்கைக்கு வந்துள்ள தூதுக்குழுவுடன் இடம்பெற்ற சந்திப்பை அடுத்து அவர் தமது எக்ஸ் பக்கத்தில் இந்த விடயத்தைப் பதிவிட்டுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் வர்த்தகச் சலுகை 2027ஆம் ஆண்டுக்குள் நிறைவடையவுள்ளமையினால் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகைக்கு இலங்கை மீண்டும் விண்ணப்பிக்க நேரும் என அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் "தாம் இரு முறை சரிபார்த்ததாகவும் நீடிப்பைக் கோருவதற்கு எந்த எல்லையும் இல்லை" என்றும் அவர் தமது பதிவில் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் நிகழ்நிலை காப்புச் சட்டம் ஆகியவற்றில் இலங்கை தற்போது தமது வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார். (அ)

# கன மழையால் நிரம்பியுள்ள 24 முக்கிய நீர்த்தேக்கங்கள்!

கொழும்பு, மே. 02

நாடு முழுவதும் பெய்து வரும் கன மழை காரணமாக நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்தமான 24 முக்கிய நீர்த்தேக்கங்கள் தற்போது நிரம்பி வழிவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நிரம்பி வழியும் இந்த முக்கிய நீர்த்தேக்கங்களில், அம்பாறை மாவட்டத்தில் 6 நீர்த்தேக்கங்களும், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 6 நீர்த்தேக்கங்களும், அனுராதபுரம் மாவட்டத்தில் 4 முக்கிய நீர்த்தேக்கங்களும், பதுளை, குருநாகல், மொனராகலை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் தலா 2 நீர்த்தேக்கங்களும் என மொத்தம் 24 நீர்த்தேக்கங்கள் இருப்பதாகவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த பிரதான நீர்த்தேக்கங்களுடன் மேலதிகமாக, 16 இற்கும் மேற்பட்ட நடுத்தர அளவிலான நீர்த்தேக்கங்களிலிரும் நீர் நிரம்பி வழிவதாகவும், திணைக்களத்துக்குச் சொந்தமான பிரதான மற்றும் நடுத்தர அளவிலான நீர்த்தேக்கங்களின் மொத்த நீர் சேமிப்புக் கொள்ளளவில் 91 வீதத்துக்கும் அதிகமானவை இப்போது சேமிக்கப்பட்டுள்ளதாகவும் நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# பஸ் சேவையில் விரைவில் அட்டைக் கட்டண முறை!

கொழும்பு, மே. 02

இலங்கை போக்குவரத்துச் சபைக்கும் தனியார் போக்குவரத்துத் துறைக்கும் அட்டைக் கட்டண முறை விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்று போக்குவரத்து பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

மக்களின் ஆணை மற்றும் அரசாங்கத்தின் தொலைநோக்குப் பார்வையின் அடிப்படையில், போக்குவரத்துத் துறையை புதிய நிலைக்குக் கொண்டு செல்ல ஒவ்வொரு துறையும் நெறிப்படுத்தப்படும் என்று பிரதி அமைச்சர் கூறினார்.

அத்துடன், பணப்புழக்கம் காரணமாக சட்டவிரோத பரிவர்த்தனைகள் மற்றும் ஊழல்கள் ஏற்படுவதாக சுட்டிக்காட்டிய அவர், போக்குவரத்துத் துறையில் அட்டை கட்டண முறையை அறிமுகப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

தேசிய போக்குவரத்து ஆணையகத்தின் புதிதாக நியமிக்கப்பட்ட தலைவர் பி.ஏ. சந்திரபாலவின் கடமைகளை ஏற்றுக் கொள்ளும் நிகழ்வில் நேற்று முன் தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

இதேவேளை, தற்போது பல துறைகளின் கீழ் இயங்கும் ஒட்டோக்கள் மற்றும் பாடசாலை போக்குவரத்து சேவைகள் உள்ளிட்ட போக்குவரத்து சேவைகளை நெறிப்படுத்த ஆணையகத்தின் மூலம் ஒரு புதிய திட்டம் செயல்படுத்தப்படும் என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் புதிதாக நியமிக்கப்பட்ட தலைவர் பி.ஏ. சந்திரபால குறிப்பிட்டார்.

மேலும், அரசாங்கத்தின் சார்பாக போக்குவரத்துத் துறையில் ஒழுங்குமுறை செயல்முறையை மேற்கொள்ளும் முதன்மை நிறுவனம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு என்றும், மக்களுக்கு சேவைகளை வழங்குவதே அதன் முதன்மைப் பொறுப்பு என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# தண்ணீர்ப் போத்தல்கள் அதிக விலைக்கு விற்றவருக்கு ஒரு இலட்சம் ரூபா அபராதம்!

கொழும்பு, மே. 02

கொழும்பு கூடுதல் நீதவான் பவித்ரா சஞ்சீவனி பத்திரண நேற்று முன் தினம் சாதாரண விலையை விட அதிக விலைக்கு தண்ணீர் பாட்டில்களை விற்பனை செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட ஒருவருக்கு ரூ.100,000 அபராதம் விதித்து உத்தரவிட்டார்.

புறக்கோட்டை, பஸ்ரியன் மாவத்தையில் உள்ள தனியார் பஸ் நிலையத்துக்கு முன்னால் அமைந்துள்ள ஒரு கடையின் உரிமையாளருக்கு இந்த அபராதம் விதிக்கப்பட்டது.

ஏப்ரல் 11 ஆம் திகதி நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைமை அலுவலகத்தின் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நடத்தப்பட்ட சோதனையைத் தொடர்ந்து சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு தண்ணீர் போத்தல்களை விற்பனை செய்வதைத் தடை செய்யும் வர்த்தமானி அறிவிப்பு நடைமுறையில் இருந்தபோதிலும் இந்த விற்பனை நடந்ததாகத் தெரியவந்தது. இதேபோன்ற மீறல்கள் பதிவாகும் இடங்களில் உடனடி சோதனைகள் மேற்கொள்ளப்படுவதாக அதிகாரிகள் நீதிமன்றத்துக்கு தெரிவித்தனர். (அ)

# அதிவேக வீதிகளில் வங்கி அட்டை மூலம் கட்டணம் செலுத்தும் சேவையில் தாமதம்!

கொழும்பு, மே. 02

அதிவேக நெடுஞ்சாலைகளில் பயணிக்கும் போது, வங்கி அட்டைகளைப் பயன்படுத்திக் கொடுப்பனவை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேலும் தாமதமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் செயல்படுத்த திட்டமிடப்பட்டிருந்த குறித்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் இந்த தாமதம் ஏற்பட்டுள்ளதாக, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் ஆர்.ஏ.டி. கஹடபிட்டிய தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 11 ஆம் திகதி கொட்டாவ மற்றும் கடவத்த சந்திப்புகளில், இதன் முன்னோடித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சட்டவிரோத சிகரெட், பீடி அதிகரிப்பு வரி வருவாயை இழந்தது அரசாங்கம்!

கொழும்பு, மே. 02

2024 ஆம் ஆண்டில் சட்டவிரோத சிகரெட்டுகள் மற்றும் உள்நாட்டுச் சந்தையில் பீடியின் அதிகரிப்பு காரணமாக, அரசாங்கம் அதன் எதிர்பார்க்கப்பட்ட 118 பில்லியன் ரூபாய் வரி வருவாயை இழந்துள்ளதாக, இலங்கை புகையிலை நிறுவனம் தெரிவித்துள்ளது.

மொத்த புகையிலை சந்தையில் சட்டபூர்வ சிகரெட்டின் பங்கு 20 சதவீதம் ஆகும். 2024 ஆம் ஆண்டில் 9.7 பில்லியன் சிகரெட்டுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

சட்டபூர்வ புகையிலைத் தொழில், அரசாங்கத்திற்கு மிகப்பெரிய வரி பங்களிப்பாளராக இருந்து வருகிறது.

அதன்படி, 2024 ஆம் ஆண்டில் மொத்த வரி வருவாயில், 161.1 பில்லியன் ரூபாவினை இலங்கை புகையிலை நிறுவனம் பங்களிப்பு செய்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இவ்வாண்டின் முதல் 4 மாதங்களில் 17,459 டெங்கு நோயாளிகள் பதிவு!

கொழும்பு, மே. 02

நாட்டில் இந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் 17,459 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளதாக, தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஏப்ரல் மாதத்தில் மட்டும் 5,018 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், சுகாதார அமைச்சின் தொற்று நோய் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர இதனைத் தெரிவித்துள்ளார். (அ)

# வீதிப் பாதுகாப்பை உறுதி செய்யும் தேசிய வேலைத்திட்டம் விரைவில்!

கொழும்பு, மே. 02

நாட்டில் வீதிப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான தேசிய வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படவுள்ளது.

இதற்கான கலந்துரையாடலொன்று நேற்று முன் தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. "கிளீன் ஸ்ரீ லங்கா" வேலைத்திட்டத்தின் கீழ் இந்த தேசிய வேலைத்திட்டம் தயாரிக்கப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

விபத்து தடுப்பு குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதும், வீதிப் பயன்பாட்டில் ஒழுக்கத்தை ஏற்படுத்துவதும் இந்த திட்டத்தின் நோக்கமாகுமென ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

# கண்டியிலிருந்து 633 மெற்றிக் தொன் கழிவை கொழும்பு கொண்டு சென்று அழிப்பது சிக்கல்

கொழும்பு, மே. 02

தலதா வழிபாட்டின் பின்னர் கண்டி நகரத்தில் 633 மெற்றிக் தொன் கழிவுகள் கொஹாகொட கழிவுகள் கொட்டப்படும் பகுதியில் கொட்டப்பட்டுள்ளன.

இந்த கழிவுகளை கொழும்புக்குக் கொண்டு வந்து அழிப்பதில் நெருக்கடியான ஒரு நிலைமை காணப்படுவதாக கண்டி மாநகர சபை தெரிவித்துள்ளது.

கடந்த நாட்களில் 450 கழிவு கொள்கலன்கள் வகைப்படுத்தப்பட்டு நகரத்தில் கழிவுகள் சேர்வதற்காக வைக்கப்பட்டிருந்த போதிலும் அது வெற்றியளிக்கவில்லை என கண்டி மாநகர சபை தெரிவித்துள்ளது.

அதன் காரணமாக வகைப்படுத்தப்படாமல் 633 மெற்றிக் தொன் கழிவுகள் சேர்ந்துள்ளதாக மாநகர சபை குறிப்பிட்டுள்ளது. இந்தக் கழிவுகளைக் கொழும்பிற்குக் கொண்டு வருவதற்கு அதிகளவிலான போக்குவரத்துச் செலவு ஏற்படுவதால் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டு வருவதாக மாநகர சபை மேலும் தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டு வருமானப் பரிசோதகர் கைது

கொழும்பு, மே. 02
இலஞ்சம் பெற்ற வருமான வரிப் பரிசோதகர் ஒருவரை இலஞ்சம் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.
அக்மீமன பிரதேச சபையின் வருமான வரிப் பரிசோதகரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.
குறித்த நபர் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பாளராகவும் போட்டியிடுவதாக தெரிவிக்கப்படுகிறது.
காலி, உனவடுன பிரதேசத்தில் இயங்கிவரும் முறைப்பாட்டாளருக்குச் சொந்தமான உணவகத்தின் 2025ஆம் ஆண்டுக்கான வர்த்தக அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்காகவே 25,000 ரூபாவை குறித்த அதிகாரி இலஞ்சமாக கோரியுள்ளார்.
அதன்படி, காலி பகுதியைச் சேர்ந்த முறைப்பாட்டாளர் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமைவாக சம்பந்தப்பட்ட அதிகாரியை முறைப்பாட்டாளரின் உணவகத்தில் வைத்து இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகள் கைதுசெய்தனர்.
கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் காலி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளார். (அ)

# பிள்ளையான் வாய் திறந்தால் பலர் உள்ளே செல்ல நேரிடும்!

## எச்சரிக்கிறார் ரில்வின் சில்வா



கொழும்பு, மே. 02
**"பிள்ளையான் வாய் திறக்க ஆரம்பித்தால் பலருக்கு உள்ளே செல்ல நேரிடும். அதனால்தான் ஆட்சியை வீழ்த்துவதற்கு முற்படுகின்றனர். அதற்கு ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாது. குற்றவாளிகள் மற்றும் கள்வர்களும் தப்பமுடியாது." _ என்று ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா திட்டவட்டமாக அறிவித்தார்.**

தேர்தல் பிரசார கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்-பேராசிரியர் ஒருவர் கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பிலேயே பிள்ளையான் கைது செய்யப்பட்டார்.
பிள்ளையான் செய்த குற்றம் அது மட்டுமல் அல்ல, அவர் பல குற்றங்களைச் செய்துள்ளார். புலிகள் அமைப்பில் இருந்த காலத்திலும் குற்றம் இழைத்துள்ளார்.
புலிகள் அமைப்பில் இருந்து வெளியேறிய பின்னர், ராஜபக்சக்களின் ஒப்பந்தத்தின் பிரகாரம் பல குற்றங்களை பிள்ளையான் செய்துள்ளார். எனவேதான் அவர் கைது செய்யப்பட்டுள்ளதால் ராஜபக்ஷக்கள், ரணில் ஆகியோர் பீதியில் உள்ளனர்.
அவர்களின் கதைகள் பிள்ளையானுக்கு தெரியும். எனவே, பிள்ளையான் வாய் திறக்க ஆரம்பித்தால் சிக்கல் வரும் என்பதும் அவர்களுக்கு புரியும். பிள்ளையான் 90 நாட்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். தமக்கு தெரிந்தவற்றை கூறுவதற்கு பிள்ளையானுக்கு வாய்ப்பு உள்ளது. அதேபோல விசாரிப்பதற்கு அதிகாரிகளுக்கும் நேரம் உள்ளது.
பிள்ளையான் வாய் திறக்க ஆரம்பித்தால் அவர்களுக்கு உள்ளே செல்ல நேரிடும். உள்ளே செல்லாமல் இருக்க வேண்டுமானால் அரசாங்கத்தை வீழ்த்த வேண்டும். அதற்கே தற்போது முற்படுகின்றனர். அதற்கு நாம் இடமளிக்க மாட்டோம்-என்றார். (அ)

# அரசின் எரிபொருள் கட்டண திருத்தம் நகைப்புக்குரியது!

கொழும்பு, மே. 02
அரசாங்கம் மேற்கொண்டுள்ள எரிபொருள் கட்டண திருத்தம் நகைப்புக்குரியது என தேசிய ஒன்றிணைந்த ஓட்டோச் சாரதிகள் சங்கத்தின் செயலாளர் ரோஹன பெரேரா தெரிவித்தார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்-அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் 160 ரூபாவுக்கு எரிபொருளை பெற்றுக் கொடுக்க முடியும் எனக் கூறியது. தற்போதைய அமைச்சர்கள் அப்போது எல்லா மேடைகளிலும் இதனைக் கூறினார்கள்.
ஆயினும் அதனை அரசாங்கத்தால் செய்ய முடியவில்லை. பெற்றோலின் விலை வெறும் ஆறு ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஓட்டோக் கட்டணத்தை ஒன்று அல்லது இரண்டு ரூபாவால் குறைக்க முடியுமா? அது சாத்தியப்படாது.
பேருந்துகளுக்கு விலைச் சூத்திரம் காணப்படுவது போல ஓட்டோக்களுக்கும் அதனை அறிமுகப்படுத்தவேண்டும் என நாம் கோரியிருந்தோம். ஆனால் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அதனை பொருட்படுத்தவில்லை.
உயர்வான எரிபொருள் விலை காரணமாகவும் ஓட்டோக்களை இயக்கும் முகவர்களாலும் நாம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம். அரசாங்கம் அதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். எதிர்வரும் தேர்தலில் மக்கள் தமது அதிருப்தியை வெளிப்படுத்துவார்கள் என நான் எதிர்பார்க்கிறேன்-என்றார். (அ)

# தடம் புரண்டது ரயில்!



கொழும்பு, மே. 02
நேற்றுக் காலை கொழும்பு, கோட்டை ரயில் நிலையம் அருகே ஒரு ரயில் தடம் புரண்டதாக கூறப்பட்டது.
மட்டக்களப்பிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்த 'புலதிசி' இன்டர்சிற்றி எக்ஸ்பிரஸ் எனும் புரயிலே கொழும்பு, கோட்டை ரயில் நிலையம் அருகே இவ்வாறு தடம் புரண்டதாக இலங்கை ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.
கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்தில் 9ஆவது நடைமேடைக்கு அருகில் ரயில் தடம் புரண்டதாகவும், தண்டவாளத்தில் ரயிலை மீட்டெடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ)

# இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் விரைவில் சபைக்கு!



கொழும்பு, மே. 02
"இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்." என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.
இந்தியாவுடன் கைச் சாத்திடப்பட்ட பாதுகாப்பு ஒப்பந்தம் உள்ளிட்ட ஒப்பந் தங்களை அரசாங்கம் இரகசியமாக வைத்திருப்பதாக எதிரணிகள் சுட்டிக் காட்டியுள்ளன. அவற்றை விரைவில் மக்கள் மயப்படுத்துமாறும் வலியுறுத் திவருகின்றன.
இந்நிலையில் இது தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறியவை வருமாறு-இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. இவ் ஒப்பந்தங்கள் தொடர்பில் புரிந்துணர்வு அடிப்படையில் இரு நாடுகளும் செயற்பட வேண்டும். சட்டமா அதிபர் திணைக்களத்துடன் கலந்துரையாடல் நடத்திய பின்னர் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும். இதில் ஒளிப்பதற்கு ஒன்றும் இல்லை.
புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு கென நடைமுறை உள்ளது. அதனை பின்பற்ற வேண்டும். விரைவில் சபையில் முன்வைக்கப்படும். நாட்டுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய ஒப்பந்தங்கள் எதுவும் கைச்சாத்திடப்படவில்லை-என்றார். (அ)

# அரசின் புதிய கட்டுப்பாட்டுக்கு இணைய ஊடக அமைப்பு எதிர்ப்பு

கொழும்பு, மே. 02
அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்புகளில் கலந்து கொள்வதற்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்ட ஊடக அங்கீகாரத்தை இப்போது கட்டாயமாக்கும், அரச தகவல் திணைக்களத்தின் புதிய கட்டுப்பாட்டுக்கு தொழில்முறை இணைய ஊடக அமைப்பு கடுமையான ஆட்சேபனைகளை எழுப்பியுள்ளது.
இந்த நடவடிக்கை ஊடக சுதந்திரத்தின் மீதான கடுமையான கட்டுப்பாடு என்றும், பொதுமக்களின் தகவல்களை அணுகும் உரிமையை மீறுவதாகவும் அமைப்பு ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது. இத்தகைய நடவடிக்கைகள் ஜனநாயக விழுமியங்களை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதாகவும், சுதந்திரமான இதழியல் நடவடிக்கைகளுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாகவும் அது எச்சரித்தது. (அ)

# சப்ரகமுவ மாகாண சபை நிதி மோசடி குறித்து இருவர் கைது

கொழும்பு, மே. 02
சப்ரகமுவ மாகாண சபையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பாரிய நிதி மோசடி தொடர்பில் நிதி மற்றும் வணிக குற்றத் தடுப்புப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதனடிப்படையில் ஏழு கோடியே 16 இலட்சத்து 45 ஆயிரத்து 226 ரூபா நிதி மோசடியில் ஈடுபட்ட சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
மாகாண சபையின் வீதி அபிவிருத்தி அமைச்சின் முன்னாள் செயலாளர் மற்றும் திட்டமிடல் பணிப்பாளர் ஆகிய இருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.
2016, 2017 ஆகிய ஆண்டு காலப் பகுதியில் எம்பிலிபிட்டிய பகுதியில் முன்னெடுக்கப்பட்ட 77 திட்டங்களில் நிதி மோசடி இடம்பெற்றுள்ளது. இந்த விடயம் தொடர்பில் 62 வயதுடைய இரத்தினபுரியைச் சேர்ந்த நபர் ஒருவரும் 52 வயதுடைய ஹிதெல்லன்ன பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.
மேலும், இவர்கள் எம்பிலிபிட்டிய நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு எதிர்வரும் மே மாதம் 08ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# ரணில் விக்கிரமசிங்கவின் நீண்டகால பாதுகாப்பு அதிகாரிக்கு இடமாற்றம்!

கொழும்பு, மே. 02
முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமை பாதுகாப்பு அதிகாரி உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.
அதன்படி, முன்னாள் ஜனாதிபதியின் பிரதான தனிப்பட்ட பாதுகாப்பு அதிகாரியாகப் பணி யாற்றிய பிரதான பரிசோதகர் அசோக ஆரியவன்ஸ, காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.
இந்த இடமாற்றத்துக்கு தேசிய பொலிஸ் ஆணையகத்தின் ஒப்புதல் கிடைத்துள்ளதாக வட்டாரங்கள் தெரிவித்தன.
பிரதான பரிசோதகர் ஆரியவன்ஸ, ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்புப் பிரிவில் 23 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். அதில் 15 ஆண்டுகள் அவர் பிரதான தனிப்பட்ட பாதுகாப்பு அதிகாரியாகவும் பணியாற்றினார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாக்காளர் அட்டை கிடைக்காதோர் அஞ்சல் நிலையத்தை நாடவேண்டும்

கொழும்பு, மே. 02

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் அருகில் உள்ள தபால் நிலையத்துக்குச் சென்று பெற்றுக்கொள்ளலாம் என தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள திணைக்களம், நாடு முழுவதும் வாக்காளர் அட்டைகளை விநியோகிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்துள்ளது.

எனினும் ஏதேனும் காரணங்களுக்காக வாக்காளர் அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தி அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் தினமான மே மாதம் ஆறாம் திகதி மாலை நான்கு மணி வரை அவற்றைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பு உண்டு எனவும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ)

# எம் கடைசி சர்வதேச நம்பிக்கை ஐரோப்பிய ஒன்றியம் மாத்திரமே!

## கண்காணிப்பு குழுவிடம் மனோ 5 அம்ச கோரிக்கை



கொழும்பு, மே. 02

**எமது கடைசி சர்வதேச நம்பிக்கை ஐரோப்பிய ஒன்றியம் என்பதை புரிந்து கொண்டு நீங்கள் இலங்கை விவகாரத்தை அணுகுங்கள் என தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**

ஐரோப்பிய ஒன்றியக் கண்காணிப்புக் குழுவிடம் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் எழுத்து மூல ஐந்து அம்ச கோரிக்கையை சமர்ப்பித்துள்ளார்.

அவர் அதில்-சர்வதேச சமூகத்தின் மீது நம்பிக்கை வைத்து தமிழ் மக்கள் சலிப்பு அடைந்து விட்டார்கள். இந்நிலையில் எமது கடைசி சர்வதேச நம்பிக்கை ஐரோப்பிய ஒன்றியம் என்பதை புரிந்து கொண்டு நீங்கள் இலங்கை விவகாரத்தை அணுகுங்கள்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் உடனடி இடை நிறுத்தம், புதிய அரசியலமைப்புக்கான கலந்துரையாடல் உடனடி ஆரம்பம், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு மூலம் காணாமல்போனோர் மற்றும் பொறுப்பு கூறல் விவகாரங்களின் உடனடி அர்த்தபூர்வ நடவடிக்கை, நீண்ட கால தமிழ் அரசியல் கைதிகளின் உடனடி விடுதலை, நவீன அடிமைத்துவம் அம்சங்களைக் கொண்ட மலையக தமிழர் சமூகத்துக்குள் வரும் பெருந்தோட்ட வாழ் மக்களை ஐரோப்பிய கண்காணிப்பு வலயத்துக்குள் கொண்டு வந்து அவர்களது காணி உரிமை உட்பட வாழ்வுரிமைகளை மேம்படுத்தல் ஆகியவை தொடர்பான முன்மொழிவுகளை எழுத்து மூலமாகவும், உரையாடல் மூலமாகவும், இலங்கைக்கு வரிச்சலுகையை தொடர்ந்து வழங்குவலாமா? என ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க கொழும்பு வந்துள்ள ஐரோப்பிய ஒன்றியக் கண்காணிப்பு குழுவினரிடம் நாம் நேரடியாக சமர்ப்பித்தோம்.

இந்த நிபந்தனைகளை திகதி குறித்து நிறைவேற்றினால் மாத்திரமே இலங்கைக்கு ஜி.எஸ்.பி பிளஸ் வரி சலுகை வழங்கப்பட வேண்டும் என தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்துள்ள ஐரோப்பிய ஒன்றியக் கண்காணிப்புக் குழுவுக்கும், தமிழ் முற்போக்குக் கூட்டணிக் குழுவுக்கும் இடையில் சந்திப்பு உரையாடல் கொழும்பில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத் தூதர கத்தில் நேற்று முன் தினம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# போலி வீசா மூலம் போலந்து செல்ல முயற்சித்தவர்கள் கைது!

கொழும்பு, மே. 02

போலி விசாக்களைப் பயன்படுத்தி போலந்து நாட்டுக்குச் செல்ல முயன்ற இரண்டு நபர்களை கட்டுநாயக்க குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் கட்டார் வழியாக போலந்துக்கு பயணிக்க முயன்ற இருவர் மீது மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளைத் தொடர்ந்து இந்த கைது இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

கைதான சந்தேக நபர்கள் 31 மற்றும் 38 வயதுடையவர்கள் என்றும், அவர்கள் தெமோதரை மற்றும் பெலிகல பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களை நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர். (அ)

# விவசாயிகளுக்கு உரம் வழங்காவிட்டால் விவசாய அமைச்சுக்கு முன் ஆர்ப்பாட்டம்!

## விவசாய ஒற்றுமை அமைப்பு தெரிவிப்பு



கொழும்பு, மே. 02

விவசாயிகளுக்கு உரத்தை பெற்றுக்கொடுக்காவிட்டால் விவசாய அமைச்சுக்கு முன்பாக பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்கப்போவதாக தேசிய விவசாய ஒற்றுமை அமைப்பின் தலைவர் அநுராத தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விவசாய அமைச்சில் ஆவணங்களை நேற்று சமர்ப்பித்த பின்னர் அவர் ஊடகங்களுக்கு இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ஆளும் அரசாங்கம் விவசாயிகள் குறித்து அக்கறைகொள்ளவில்லை. விவசாயிகளுக்கான உரம் தொடர்பில் நாடு முழுவதும் பிரச்னை எழுந்துள்ளது.

உரத்தின் விலை அறிவிக்கப்படாமல் திடீரென அதிகரிக்கப்பட்டுள்ளது.

சுமார் ஆயிரம் ரூபாவால் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகள் பெரும் பிரச்னையை எதிர் நோக்கியிருக்கிறார்கள்.

இதற்கு அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகள் பொறுப்புக் கூற வேண்டும்.

விவசாயிகளின் வாக்குகளைப் பெற்றுக்கொண்ட அரசாங்கம் அவர்களை பொருட்படுத்தாமல் நடந்துகொள்வது வேதனையளிக்கிறது.

எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் உரப் பிரச்னைக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்காவிட்டால் விவசாய அமைச்சு முன்பாக பாரிய ஆர்ப்பாட்டத்தை மேற்கொள்ளவுள்ளோம்-என்றார். (அ)

# டெங்கு நோய் கட்டுப்பாட்டு உதவியாளர்களாக 671 பேர்!

கொழும்பு, மே. 02

டெங்கு கட்டுப்பாட்டு உதவியாளர்களாக நிரந்தர சேவைக்கு 671 பேரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

நாட்டில் தற்போது அதிகரித்து வரும் டெங்கு பரவலைக்கட்டுப் படுத்துவதில் சுகாதார மற்றும் ஊடக அமைச்சு மிகுந்த கவனம் செலுத்திவருகிறது. மேலும், டெங்குகட்டுப்பாட்டுத்திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தும் நோக்கில் பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

இது தொடர்பாக, ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு நீண்டகாலமாக பணியாற்றிய டெங்குகட்டுப்பாட்டு உதவியாளர்களை நிரந்தர பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான நேர்காணல்கள் 26 மற்றும் 27 ஆம் திகதிகளில் சுகாதார மற்றும் ஊடக அமைச்சக வளாகத்தில நடைபெற்றன.

நிர்வாக சேவைகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட ஒப்புதலின் படி, டெங்கு கட்டுப்பாட்டு உதவியாளர்களாக நிரந்தர சேவைக்கு 671 பேரை ஆட்சேர்ப்பு செய்வதற்காக சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு இந்த நேர்காணலை நடத்தியது, இதில் 660 க்கும் மேற்பட்ட விண்ணப்பதாரர்கள் பங்கேற்றனர். (அ)

# பாதுகாப்புச் செயலர் பாகிஸ்தான் இராணுவத் தளபதியுடன் சந்திப்பு

கொழும்பு, மே. 02

பாகிஸ்தானில் தற்போது நடைபெற்று வரும் பாதுகாப்பு கலந்துரையாடலின் ஒரு அங்கமாக, பாதுகாப்பு செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் சம்பத் துயகொந்தா (ஓய்வு) நேற்று முன் தினம் பாகிஸ்தான் இராணுவத் தளபதி ஜெனரல் அசிம் முனீரை சந்தித்தார்.

பாதுகாப்பு செயலாளருடன் இலங்கை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் காஞ்சன பானகொட மற்றும் இலங்கை இராணுவ பிரதம அதிகாரி மேஜர் ஜெனரல் சந்தன விக்ரமசிங்க ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

பிறிதொரு சந்தர்ப்பத்தில், பாதுகாப்புச் செயலாளர் பாகிஸ்தானின் பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சர் அஹத் கான் சீமாவையும் சந்தித்தார்.

இந்த சந்திப்புகள் இலங்கை அதன் அண்டை நாடுகளுடன் இருதரப்பு பாதுகாப்பு மற்றும் பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவதற்கான அதன் உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுவதுடன், பிராந்தியத்தில் அமைதி மற்றும் பாதுகாப்பை நிலைநிறுத்துவதற்கான அதன் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுவதாகவும் அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சந்திப்பின் போது நினைவுச் சின்னங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டன. (அ)

# வரி காலக்கெடு முடிவதற்குள் அமெரிக்காவுடன் உடன்பாடு!

## பிரதியமைச்சர் ஹர்ஷன சூரியப்பெரும



கொழும்பு, மே. 02

தீர்வை வரி பிரச்னை தொடர்பிலான இணக்கப்பாட்டை அந்த தீர்வை வரி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 90 நாட்களுக்குள் மேற்கொள்ளப்பட எதிர்பார்ப்பதாக நிதி மற்றும் திட்டமிடல் பிரதியமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் தெரிவித்தார்.

உலகெங்கிலும் உள்ள சுமார் நூறு நாடுகளை குறிவைத்து, வெளிநாட்டு இறக்குமதிகள் மீதான வரிகளை அதிகரிக்க அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கடந்த ஏப்ரல் 2 ஆம் திகதி நடவடிக்கை எடுத்தார்.

அதே நேரத்தில், அமெரிக்காவுடனான தற்போதைய வர்த்தக பற்றாக்குறையின் அடிப்படையில் இலங்கை மீது 44வீத வரி விதிக்கப்பட்ட நிலையில், அதனை 90 நாட்களுக்கு நிறுத்தி வைக்க ஜனாதிபதி ட்ரம்ப் பின்னர் நடவடிக்கை எடுத்தார்.

இது தொடர்பாக இலங்கை அரசாங்கக் குழு ஏற்கனவே அமெரிக்காவுடன் கலந்துரையாடல்களைத் தொடங்கியுள்ளதுடன், அதன் முன்னேற்றம் குறித்த விவரங்கள் வெளியிடப்பட்டன. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையான் சிறையிலிருப்பது மிகவும் கொடுமையான விடயம்

## முன்னாள் பிரதியமைச்சர் கருணா சொல்கிறார்

மட்டக்களப்பு, மே 02

**பிள்ளையான் தற்போது சிறையில் இருப்பது மிகவும் கொடுமையான விடயமாகும். ஏற்கனவே இல்லாத பிரச்னையில் அவர் நான்கு ஆண்டுகள் சிறையிலே இருந்தார். பின்னர் நிரபராதி என அவர் வெளியே வந்தார். அவ்வளவு காலத்துக்கும் யார் பதில் சொல்வது? அது போன்றதொரு விடயம்தான் தற்போது அவருக்கு நடந்துள்ளது என்று முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தெரிவித்துள்ளார்.**

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கிழக்கு தமிழர் கூட்டமைப்பு சார்பில் மட்டக்களப்பு மாவட்டம் பங்குடாவெளி 14ஆம் வட்டாரத்துக்கான தேர்தல் பரப்புரை காரியாலயம் திறந்து வைக்கப்பட்டது. இதில், கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கிழக்கு மாகாணத்திலே முதன் முதலாக மாகாண சபையைக் கட்டி எழுப்பி அதில் முதல் முதலமைச்சராக சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) பதவி வகித்து, பெரும் அபிவிருத்திகளை செய்திருந்தார். அதன் பின்னர்தான் கல்வி அபிவிருத்தி உள்ளிட்ட அனைத்து அபிவிருத்திகளும் கிழக்கில் நடைபெற்றன.

பின்னர் நான் மத்திய அரசாங்கத்தில் இருந்துகொண்டு பல வீட்டுத்திட்டங்களையும், வீதிகள், பாலங்கள் என பல அபிவிருத்தித் திட்டங்களையும் செய்திருந்தேன். அதுபோன்று, முன்னாள் இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனும் மத்திய அரசாங்கத்தில் இருந்த போது பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை செய்திருந்தார்.

இவ்வாறு பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை செய்து விட்டுதான் நாங்கள் தற்போது இந்த உள்ளூராட்சி மன்றத்தில் நமது பிரதிநிதிகளை களம் இறக்கியிருக்கின்றோம். எனவே, மக்கள் தற்போது கிடைத்திருக்கும் வாய்ப்பை தவறவிடக்கூடாது. ஏனெனில், பல பிரச்னைகள் நம் மத்தியில் காணப்படுகின்றன.

ஒரு நபர் வயல் அமைப்பதற்காக பல மக்கள் பாவிக்கின்ற குளத்தை உடைக்கின்றார்கள். மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். ஒருவரும் சென்று அதனை பார்வையிடவில்லை. இவ்வாறானவர்கள் நமக்கு எதற்கு?

தேர்தல் காலத்தில் மேய்ச்சல் தரைப் பிரச்னையைத் தீர்த்து வைப்போம் என தெரிவிப்பார்கள். தேர்தலில் வெற்றி பெற்றதும் அந்தப் பக்கமே அவர்கள் போகவில்லை.

இவர்களை நம்பி வாக்களித்ததுதான் மீதமாக உள்ளது. இதற்காகத்தான் நாம் கிழக்கு தமிழர் கூட்டமைப்பு என்ற ஓர் அமைப்பை உருவாக்கியுள்ளோம். இதனை எமது மக்கள் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கான ஓர் அத்திவாரம் தற்போது போடப்பட்டுள்ளது.

மக்கள் இவ்விடயத்தில் விழிப்பாக இருந்து செயல்பட வேண்டும். தவறான பிரசாரங்களை நம்பி மக்கள் ஏமாந்துவிடக்கூடாது. தற்போது கிடைத்திருப்பது ஒரு நல்ல வாய்ப்பாகும். இந்த வாய்ப்பை சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும். இதனை ஏனையோருக்கும் தெளிவுபடுத்த வேண்டும்.

அரசாங்கத்தில் விதி போல ஒன்றுள்ளது. அரசாங்கம் மாறி மாறி வருகின்றபோது முன்னைய அரசாங்கத்தில் இருப்பவர்களை பிடித்து கைது செய்வது வழக்கம். இப்போது இருக்கின்ற அரசாங்கத்தில் இருப்பவர்கள் அடுத்த முறை வருகின்ற அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டு அனைவரும் உள்ளே அனுப்பப்படுவார்கள். நானும் உள்ளே இருந்து வந்தவன்தான். இவை அனைத்தும் அரசியல் பழிவாங்கல்கள்.

இவை எமது மக்களையும் எமது இருப்புக்களையும் ஒரு போதும் பாதிக்கப்போவதில்லை. இதை பற்றி நாம் அலட்டிக்கொள்ள வேண்டிய தேவையும் இல்லை. ஆனால், எவ்வகையான தியாகங்களை செய்தவர்கள் என்பதை எனது மக்கள் சிந்திக்க வேண்டும்"- என்றார். (எ)



# மாணவர்கள் பாராட்டி கௌரவிப்பு

கல்முனை, மே 02

அண்மையில் வெளியான க. பொ. த. உயர்தரப் பரீட்சை பெறுபெறுகளின் அடிப்படையில் அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரியிலிருந்து பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் ச. இ. றெஜினோல்ட் தலைமையில் கடந்த 30 ஆம் திகதி நடைபெற்றது. (எ- 06)

# திருகோணமலை மாவட்டத்தில் மட்டும் 129 நிலையங்களில் வாக்கெண்ணும் பணி

திருகோணமலை, மே 02

திருகோணமலை மாவட்டத்தில் மட்டும் இம்முறை 129 நிலையங்களில் வாக்கெண்ணும் பணி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 06ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் தொடர்பில் வட்டார உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான செயலமர்வு கடந்த 30 ஆம் திகதி திருகோணமலை மாவட்ட செயலாளர் ஹேமந்த குமார தலைமையில் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது, உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் தொடர்பில் வட்டாரத்துக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான அறிவுறுத்தல்கள், கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் குறித்து மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் நிறஞ்சனால் தெளிவூட்டப்பட்டன.

இம்முறை உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் 321 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அத்தோடு, 129 நிலையங்களில் வாக்கெண்ணல் நடைபெறவுள்ளது. (எ)

இடியுடன் கூடிய பலத்த மழையால்

# மரம் முறிந்து வீழ்ந்ததில் வீடுகளுக்கு பலத்த சேதம்



தம்பலகாமம், மே 02

திருகோணமலை மாவட்டம், தம்பலகாமம் பகுதியில் நேற்று முன்தினம் கனமழையுடன் கூடிய பலத்த காற்றால் வீடுகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டது.

தென்னை மரம் முறிந்து வீட்டின் மீது வீழ்ந்ததில் வீட்டு கூரை உள்ளிட்ட வீட்டு உபகரணங்களும் சேதமாக்கப்பட்டுள்ளதாக வீட்டு உரிமையாளர்கள் கூறினர். கனமழை காரணமாக வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக மக்கள் கூறினார். (எ)

# மட்டக்களப்பில் நடைபெற்ற சர்வதேச நடன தின நிகழ்வு



மட்டக்களப்பு, மே 02

மட்டக்களப்பு மாவட்டம் பட்டிருப்பு கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் சர்வதேச நடன தின விழா கடந்த 29 ஆம் திகதி மாலை களுதாவளை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

பட்டிருப்பு கல்வி வலய நடன ஆசிரிய ஆலோசகர் வனிதா சேகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக பட்டிருப்பு கல்வி வலயத்தின் பணிப்பாளர் சிவானந்தம் சிறீதரன் கலந்து சிறப்பித்தார்.

மேலும், பிரதிக் கல்விப் பணியாளர்கள், உதவிக் கல்விப் பணியாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து சிறப்பித்தனர். (எ)

# அம்பாறையில் இதுவரை 385 தேர்தல் முறைப்பாடு!



கல்முனை, மே 02

அம்பாறை மாவட்டத்தில் மட்டும் இதுவரை 385 தேர்தல் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் 06 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அம்பாறை மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரும் மாவட்ட செயலாளருமான சிந்தக அபேவிக்ரம தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் அம்பாறை மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு ஏற்பாடு செய்யப்பட்ட விசேட ஊடகச் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2025 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் 06 ஆம் திகதி நடைபெறவுள்ளன. இதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அம்பாறை மாவட்டத்தில் உள்ள 19 உள்ளூராட்சி மன்றங்களுக்காக 4 இலட்சத்து 78 ஆயிரம் வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். இந்தத் தேர்தலுக்காக 458 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதேவேளை, 202 இடங்களில் வாக்குகள் எண்ணப்படும். இவ்வாறு உரிய இடங்களில் எண்ணப்பட்டு அப்பகுதிக்கு பொறுப்பான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு தெரிவிக்கப்படும். பின்னர் உள்ளூராட்சி மன்றத்துக்கு தெரிவான பிரதிநிதிகள் குறித்து உதவித் தெரிவத்தாட்சி அலுவலகர் அறிவிப்பார். தொடர்ந்து வாக்குகள் உள்ளிட்ட சகல ஆவணங்களும் மத்திய நிலையமான அம்பாறை ஹாடி உயர் தொழில்நுட்ப வளாகத்துக்கு எடுத்து வரப்படும். பின்னர் உத்தியோகபூர்வமாக உள்ளூராட்சி மன்றங்களுக்கு தெரிவான பிரதிநிதிகளின் பெயர் விவரங்கள் வெளியிடப்படும்.

இதுதவிர வாக்குப் பெட்டி, வாக்குச் சீட்டு, இதர ஆவணங்கள் விநியோகித்தல் நடவடிக்கைகள் அம்பாறை ஹாடி உயர் தொழில்நுட்ப வளாகத்தில் தேர்தலுக்கு முதல் நாள் ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மார்ச் மாதம் 17 ஆம் திகதியிலிருந்து ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி மதியம் 12.00 மணி வரை 385 தேர்தல் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதில் 9 முறைப்பாடுகளுக்கு பொலிஸ் தரப்பினரால் தீர்வுகள் காணப்பட்டுள்ளன. ஏனைய முறைப்பாடுகளுக்கு தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகளால் தீர்வுகள் காணப்பட்டன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் 22, 919 தபால் மூல வாக்களிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.1300 உத்தியோகத்தர்கள் இந்தத் தேர்தலில் கடமையாற்றவுள்ளனர்.2000 பொலிஸாரும் இத்தேர்தல் கடமையில் ஈடுபடவுள்ளனர்.ஏனைய தரப்பினர் 5000 பேர் தேர்தல் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.அத்துடன் அம்பாறை மாவட்டத்தில் இத்தேர்தலில் விசேட தேவையுடையவர்கள் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.இதேவேளை வாக்காளர்கள் அனைவரும் நேரகாலத்தோடு வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்று வாக்களிக்குமாறும் இறுதிநேரம் வரை காத்திருக்காது வாக்குரிமையை பயன்படுத்துமாறும் அரசாங்க அதிபர் தெரிவித்தார். (எ- 01)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# பஹல்காமில் நடந்த தாக்குதலில் பாகிஸ்தானுக்கு தொடர்பில்லை!

## மீண்டும் மறுத்தது அந்நாட்டு அரசாங்கம்

இஸ்லாமாபாத், மே 02

**இந்தியாவுடனான பதற்றங்கள் அதிகரித்துள்ள நிலையில், நிதானத்தைக் கடைப்பிடிப்பதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது, ஆனால், சர்வதேச சட்டத்தின் கீழ் தற்காப்புக்கான அதன் உரிமையைப் பயன்படுத்தி, தாக்குதல் நடத்தினால், வலுவாகவும், தீர்க்கமாகவும் பதிலளிக்கும் என்றும் பாகிஸ்தான் எச்சரித்துள்ளது. இதேவேளை, பஹல்காமில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலில் பாகிஸ்தானுக்கு தொடர்பில்லை என்றும் தெரிவித்துள்ளது.**

காஷ்மீர் பஹல்காமில் இடம்பெற்ற தாக்குதல் தொடர்பாக பாகிஸ்தானை இந்தியா குற்றஞ்சாட்டி வருவதுடன், அந்த நாட்டுக்கு எதிரான அதிரடி நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. அதேநேரம் இந்தத் தாக்குதலுக்கும், தங்களுக்கும் தொடர்பு இல்லை என பாகிஸ்தான் மறுத்து வருகிறது.

இதை நேற்று முன்தினம் மீண்டும் பாகிஸ்தான் கூறியுள்ளது. முன்னதாக அந்த நாட்டு இராணுவச் செய்தித் தொடர்பாளர், வெளிவிவகாரத்துறை செய்தித் தொடர்பாளர் உள்ளிட்டோர் செய்தியாளர்களிடம் கூட்டாக தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் கூறுகையில், "எந்த வகையிலான பயங்கரவாதத்தையும் பாகிஸ்தான் கண்டிக்கிறது. அப்பாவி மக்கள் உயிரைப் பறிப்பதை எந்தவகையிலும் நியாயப்படுத்த முடியாது. பஹல்காம் தாக்குதல் உயிரிழப்புகளுக்கு நாங்களும் கவலையை வெளியிட்டிருக்கிறோம். நாங்களும் எங்கள் இரங்கலை தெரிவித்தோம்" என தெரிவித்தனர்.

பஹல்காம் தாக்குதலுக்கு ஒரு சிறிய ஆதாரமும் இல்லாமல், நம்ப முடியாத வேகத்தில் பாகிஸ்தான் மீது இந்தியா குற்றச்சாட்டுகளை முன்வைத்ததாக தெரிவித்த அவர்கள், பாகிஸ்தானுக்கும், இதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை எனவும், நாங்கள் ஆரம்பத்திலிருந்தே அதைத்தான் கூறி வருகிறோம் என்றும் கூறினர். அதேநேரம் பாகிஸ்தானை சீண்டினால் பதிலடி கொடுக்கப்படும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

(எ)

# இஸ்ரேல் தாக்குதலால் காஸாவில் 35 பேர் பலி

காஸா, மே 02

காஸாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 35 பேர் பலியாகினர்.

காஸா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் நுழைந்து பயங்கரவாதத் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலிலிருந்து 251 பேரை பணயக் கைதிகளாக காஸா முனைக்கு ஹமாஸ் அமைப்பினர் கடத்திச் சென்றனர்.

இதையடுத்து, ஹமாஸ் போராளிகள் மீது போர் அறிவித்த இஸ்ரேல் காஸா முனையில் அதிரடித் தாக்குதல் நடத்தி வருகிறது. அதேவேளை, பணயக் கைதிகளில் பலரை ஒப்பந்த அடிப்படையிலும், இராணுவ நடவடிக்கை மூலமும் இஸ்ரேல் மீட்டுள்ளது.

பணயக் கைதிகளில் சிலர் ஹமாஸ் அமைப்பினரால் கொல்லப்பட்ட நிலையில் அவர்களின் சடலங்களும் மீட்கப்பட்டன. தற்போதைய நிலவரப்படி, ஹமாஸ் அமைப்பின் பிடியில் இன்னும் 59 பேர் பணயக் கைதிகளாக உள்ளனர்.

அதேவேளை, பணயக் கைதிகளை மீட்கவும், ஹமாஸ் போராளிகளை முழுமையாக ஒழிக்கும் நோக்கிலும் காஸா முனையில் இஸ்ரேல் தொடர்ந்து தரை வழி, வான்வழித் தாக்குதலை நடத்தி வருகிறது.

இந்த நிலையில், காஸா முனையில் இஸ்ரேல் நேற்றுத் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில் 35 பேர் உயிரிழந்தனர். இதில் ஹமாஸ் அமைப்பினரும் அடக்கம் என தகவல் வெளியாகியுள்ளது. இஸ்ரேல், ஹமாஸ் போரில் காஸாவில் ஹமாஸ் போராளிகள் உட்பட இதுவரை 52 ஆயிரத்து 400 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(எ)

# ஏமனில் இங்கிலாந்து வான்வழி தாக்குதல்

சனா, மே 02

ஏமனில் இங்கிலாந்து வான்வழித் தாக்குதல் நடத்தியுள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போர் ஓராண்டுக்கு மேல் நீடித்து வருகிறது. இந்தப் போரில் 52 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இதனிடையே, இஸ்ரேல் - ஹமாஸ் இடையேயான போரில் ஹமாஸ் அமைப்பினருக்கு ஏமனில் செயல்பட்டு வரும் ஹவுதி கிளர்ச்சியாளர் ஆதரவு வழங்கி வருகின்றனர்.

ஹமாஸுக்கு ஆதரவு வழங்கும் வகையிலும், இஸ்ரேலுக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் அரபிக்கடல், செங்கடலில் செல்லும் சரக்கு கப்பல்களை குறிவைத்து ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். மேலும், இஸ்ரேல் மீதும் அவ்வப்போது ஏவுகணை, ட்ரோன் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

அதேபோன்று, செங்கடல் பகுதியில் பாதுகாப்பு, ரோந்து பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அமெரிக்க ட்ரோன்கள், போர்க் கப்பல்கள் மீதும் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இந்தத் தாக்குதலுக்கு இஸ்ரேல், அமெரிக்கா, இங்கிலாந்து அவ்வப்போது தக்க பதிலடி கொடுத்து வருகிறது.

இந்த நிலையில், ஏமனில் இங்கிலாந்து நேற்று வான்வழித் தாக்குதல் நடத்தியுள்ளது. செங்கடல் தாக்குதலுக்குப் பதிலடியாக அமெரிக்கப் படைகளுடன் இணைந்து இங்கிலாந்து வான்வழித் தாக்குதல் நடத்தியுள்ளது. ஏமன் தலைநகர் சனாவில் நடந்த இந்த வான்வழித் தாக்குதல் ஹவுதி கிளர்ச்சியாளர்களின் ட்ரோன் தயாரிப்பு நிலையத்தை குறிவைத்து நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலில் உயிரிழப்பு ஏதேனும் ஏற்பட்டதா? என்பது குறித்த தகவல் வெளியாகவில்லை.

(எ)

# இந்தியாவுடனான வர்த்தக பேச்சுகளில் முன்னேற்றம்

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்

வாஷிங்டன், மே 02

இந்தியாவுடனான வர்த்தக பேச்சுகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

இலங்கை, இந்தியா, சீனா உட்பட பல்வேறு நாடுகள் மீது ட்ரம்ப் கூடுதல் வரிகளை விதித்தார். பின்னர் சீனாவை தவிர மற்ற நாடுகள் மீதான வரி விதிப்பை நிறுத்தி வைத்தார். இதற்கிடையே இந்தியா - அமெரிக்கா இடையே வர்த்தக பேச்சுகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில், அமெரிக்காவில் வெள்ளை மாளிகைக்கு வெளியே ஜனாதிபதி ட்ரம்ப் நேற்று முன்தினம் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:-

இந்தியாவுடனான வரி பேச்சுவார்த்தை சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்த வர்த்தக பேச்சுகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. விரைவில் வர்த்தக ஒப்பந்தம் ஏற்படும். 90 நாள் வரி இடைநிறுத்தத்தின் போது ஆபிரிக்காவுக்குச் சென்று அதிகாரிகளுடன் பேச்சுகளை நடத்த திட்டமிட்டுள்ளேன். அதை அறிவிக்க நாட்டின் ஒப்புதலுக்காகக் காத்திருக்கிறேன்- என்றார்.

(எ)

# காஷ்மீர் செல்லும் விமானங்களை திடீரென ரத்து செய்த பாகிஸ்தான்

லாகூர், மே 02

ஆக்கிரமிப்பு காஷ்மீருக்கு செல்லும் விமானங்களை பாகிஸ்தான் திடீரென இரத்து செய்துள்ளது.

ஜம்மு-காஷ்மீரின் அனந்தநாக் மாவட்டம் பஹல்காமில் உள்ள சுற்றுலாத் தலத்தில் கடந்த 22ஆம் திகதி பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் சுற்றுலாப் பயணிகள் 26 பேர் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலுக்கு பாகிஸ்தானை தலைமையிடமாக கொண்டு செயல்பட்டு வரும் லஷ்கர் இ தொய்பா பயங்கரவாத அமைப்பின் கிளை அமைப்பான தி ரெசிஸ்டண்ட் பிரண்ட் பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

இந்தத் தாக்குதலை தொடர்ந்து இந்தியா, பாகிஸ்தான் இடையே போர் மூளும் சூழ்நிலை உருவாகியுள்ளது. பாகிஸ்தான் மீது இந்திய இராணுவம் தாக்குதல் நடத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், ஆக்கிரமிப்பு காஷ்மீருக்கு செல்லும் அனைத்து விமானங்களையும் பாகிஸ்தான் இரத்து செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள கில்கித், ஸ்கர்டு ஆகிய நகரங்களுகு செல்லும் விமானங்கள் அனைத்தும் இரத்து செய்யப்பட்டுள்ளன. பாதுகாப்பு காரணங்களுக்காக விமான சேவை இரத்து செய்யப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

(எ)

# பாகிஸ்தானில் 10 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை

லாகூர், மே 02

பாகிஸ்தானில் மேலும் 10 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர்.

பாகிஸ்தானில் பலூசிஸ்தான் கிளர்ச்சிப்படை, தெக்ரிக் ஐ தலிபான் பாகிஸ்தான் உட்பட பல்வேறு பயங்கரவாத அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. இந்த பயங்கரவாத அமைப்புகளுக்கும், பாதுகாப்புப்படையினருக்கும் இடையே அவ்வப்போது மோதல் ஏற்பட்டு வருகிறது. இந்த நிலையில், பலுசிஸ்தான் மாகாணத்தில் இரண்டு தனித்தனி சம்பவங்களில் 10 பயங்கரவாதிகளை பாகிஸ்தான் பாதுகாப்புப் படையினர் கொன்றதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

கெச், ஜியாரத் மாகாணத்தில் பயங்கரவாதிகள் இருப்பது குறித்து அந்த நாட்டின் புலனாய்வுத்துறைக்குத் இரகசிய தகவல் வந்தது. இந்த நிலையில் நேற்று அதிகாலை பாதுகாப்புப் படையினருக்கும் ஆயுதமேந்திய பயங்கரவாதிகளுக்கும் இடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது. அப்போது பயங்கரவாதிகளுக்கு எதிராக நடத்தப்பட்ட தேடுதல் வேட்டையில் 10 பயங்கரவாதிகளை படையினர் சுட்டுக் கொன்றனர்.

கொல்லப்பட்ட பயங்கரவாதிகளிடமிருந்து ஆயுதங்கள், வெடிமருந்துகள் மீட்கப்பட்டன, அவர்கள் பாதுகாப்புப் படையினருக்கு எதிரான ஏராளமான தாக்குதல்களிலும் பொதுமக்களைக் கொன்றதிலும் ஈடுபட்டதும் தெரியவந்துள்ளது.

(எ)

# பாப்பரசராக இருக்க நான் விரும்புகிறேன்

## டொனால்ட் ட்ரம்ப் தெரிவிப்பு

வாஷிங்டன், மே 02

"நான் பாப்பரசராக இருக்க விரும்புகிறேன். அதுதான் எனது முதல் தெரிவாக இருக்கும்"- இவ்வாறு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவரான போப் பிரான்சிஸ் உடல் நலக்குறைவு காரணமாக கடந்த 21ஆம் திகதி வத்திக்கானில் காலமானார்.

இந்த நிலையில், புதிய பாப்பரசர் தெரிவு குறித்து ட்ரம்ப் கூறுகையில், "நான் பாப்பரசராக இருக்க விரும்புகிறேன். அதுதான் எனது முதல் தெரிவாக இருக்கும்"- என்றார்.



மேலும், போப் பிரான்சிஸுக்குப் பதிலாக யார் இருக்க வேண்டும் என்று கேட்டபோது, பதிலளித்த ட்ரம்ப், நியூயோர்க் வெளியே இருக்கும் ஒரு கார்டினல் எங்களிடம் இருக்கிறார். அவர் மிகவும் நல்லவர், எனவே என்ன நடக்கிறது என்று பார்ப்போம் எனவும் டரம்ப் கூறினார்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# 4 விக்கெட் வித்தியாசத்தில் பஞ்சாப் அசத்தல் வெற்றி

## மீண்டும் சொதப்பியது சென்னை




சென்னை, மே 02

சென்னை அணியை 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி பஞ்சாப் அணி வெற்றி பெற்றது.

10 அணிகள் இடையிலான ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு இடங்களில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்த நிலையில், சென்னை சேப் பாக்கம் மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு நடை பெற்ற ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் - பஞ்சாப் கிங்ஸ் அணிகள் மோதின.

இதில், சென்னை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. ஷேக் ரஷீத் 11 ஓட்டங்கள், ஆயுஷ் மாத்ரே 7 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர். பின்னர் சாம் கரன், டெவால்ட் பிரேவிஸ் இருவரும் இணைந்து சிறப்பாக விளையாடினர்.

பந்துகளை பௌண்ட்ரி, சிக்ஸருக்கு பறக்க விட்டனர். பிரேவிஸ் 32 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். சாம் கரன் அரைச் சதமடித்து அசத்தினார். தொடர்ந்து அதிரடியாக ஆடிய சாம் கரன் 88 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார். பஞ்சாப் அணி சார்பில் சாஹல் ஹட்ரிக் உட்பட 4 விக்கெட்களை வீழ்த்தி அசத்தினார்.

இறுதியில் 19. 2 ஓவர்கள் முடிவில் சென்னை அணி 190 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. தொடர்ந்து 191 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் பஞ்சாப் அணி விளையாடியது.

இதில், தொடக்க ஆட்டக்காரர்களான ஆர்யா -23, பிரப்சிம்ரன் சிங் - 54 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர். அணித் தலைவர் ஸ்ரேயஸ் ஐயர் 72 ஓட்டங்கள் எடுத்து அணியை வெற்றிக்கு வழிநடத்தி சென்றார். வதேரா -5, ஷஷாங் சிங் -23 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர். ஷெட்கே ஓர் ஓட்டம் எடுத்து வெளியேறினார்.

ஜோஷ் இங்லிஸ் (6), ஜான்சென் (4) ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர். இந்த நிலையில், 19.4 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்களை இழந்து பஞ்சாப் அணி 191 ஓட்டங்கள் எடுத்தது. இதனால், 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் பஞ்சாப் அணி வெற்றி பெற்றது.

சென்னை அணி சார்பில் கலீல் அகமது மற்றும் பத்திரண ஆகியோர் தலா 2 விக்கெட்களை கைப்பற்றினர். ஜடேஜா, நூர் அகமது தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.



## பஞ்சாப் அணித்தலைவர் ஸ்ரேயஸுக்கு அபராதம்

சென்னை, மே 02

பஞ்சாப் அணியின் தலைவர் ஸ்ரேயஸ் ஐயருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் - பஞ்சாப் கிங்ஸ் அணிகள் மோதின. இதில் பஞ்சாப் அணி 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. தோல்வியடைந்த சென்னை சுப்பர் கிங்ஸ் நடப்பு ஐ.பி.எல். தொடரின் பிளேஒப் சுற்று வாய்ப்பிலிருந்து வெளியேறியது.

இந்த ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் குறிப்பிட்ட நேரத்துக்குள் பந்துவீசி முடிக்கவில்லை. இதனால், அந்த அணியின் தலைவர் ஸ்ரேயஸ் ஐயருக்கு இலங்கை மதிப்பில் 42 இலட்சம் ரூபாய் அபராதம் விதித்து ஐ.பி.எல். நிர்வாகம் தண்டனை வழங்கியுள்ளது. (எ)

## பிளேஒவ் சுற்றிலிருந்து வெளியேறியது சென்னை

சென்னை, மே 02

ஐ. பி. எல். வரலாற்றில் முதன்முறையாக அடுத்தடுத்த சீசன்களில் பிளேஒவ் சுற்றிலிருந்து சென்னை அணி வெளியேறியது.

சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் எம். எஸ். டோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணி, ஸ்ரேயஸ் ஐயர் தலைமையிலான பஞ்சாப் கிங்ஸ் அணியுடன் மோதியது.

இதில், 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் சென்னை அணியை வீழ்த்தி பஞ்சாப் அணி வெற்றி பெற்றது.

இந்தச் சூழலில் புள்ளிகளின் அடிப்படையில் பின்தங்கியுள்ள சென்னை அணி பிளேஒப் சுற்றில் விளையாட முடியாத நிலையில் உள்ளது. இதனால், முதன்முறையாக அடுத்தடுத்த சீசன்களில் பிளேஒப் சுற்றுக்கு முன்னேறாத நிலையை சென்னை அணி எதிர்கொண்டுள்ளது. (எ)

## சிம்பாவேயை வீழ்த்தி பங்களாதேஷ் வெற்றி

சட்டோகிராம், மே 02

சிம்பாவே கிரிக்கெட் அணி பங்களாதேஷில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 2 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இதில் முதல் போட்டியில் சிம்பாப்வே வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி சட்டோகிராமில் கடந்த 28ஆம் திகதி தொடங்கியது.

இதில், சிம்பாவே முதல் இன்னிங்ஸில் 227 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. சிம்பாவே தரப்பில் அதிகபட்சமாக சீன் வில்லியம்ஸ் 67 ஓட்டங்கள் எடுத்தார். பங்களாதேஷ் தரப்பில் தைஜுல் இஸ்லாம் 6 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதையடுத்து தனது முதல் இன்னிங்ஸில் பங்களாதேஷ் 444 ஓட்டங்கள் எடுத்தது. ஷத்மான் இஸ்லாம் 120 ஓட்டங்களும் மெஹதி ஹசன் மிராஸ் 114 ஓட்டங்களும் எடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து 217 ஓட்டங்கள் பின்னிலையுடன் தனது 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய சிம்பாவே அணியினர், பங்களாதேஷ் அணியினரின் அபார பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து விக்கெட்களை பறிகொடுத்தனர். இதனால் சிம்பாவே அணி தனது 2ஆவது இன்னிங்ஸில் 111 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது.

சிம்பாவே தரப்பில் அதிகபட்சமாக பென் கர்ரன் 46 ஓட்டங்கள் எடுத்தார். பங்களாதேஷ் தரப்பில் மெஹதி ஹசன் மிராஸ் 5 விக்கெட்கள் வீழ்த்தினார். இந்த வெற்றியின் மூலம் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 1-1 என்ற கணக்கில் பங்களாதேஷ் சமன் செய்தது. (எ)





## பல சாதனைகள் படைத்த சாஹல்

சென்னை, மே 02

சென்னைக்கு எதிரான ஆட்டத்தில் சாஹல் 4 விக்கெட்கள் வீழ்த்தினார். இதன் மூலம் அவர் பல சாதனைகள் படைத்துள்ளார்.

ஐ.பி.எல். தொடரில், சென்னை சேப்பாக்கத்தில் நேற்று முன்தினம் அரங்கேறிய 49ஆவது லீக் ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் - பஞ்சாப் கிங்ஸ் அணிகள் மோதின. இதில் 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் பஞ்சாப் அணி வெற்றி பெற்றது. அந்த அணி தரப்பில் யுஸ்வேந்திர சாஹல் "ஹட்ரிக்" உட்பட 4 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இந்த ஆட்டத்தில் "ஹட்ரிக்" உட்பட 4 விக்கெட்கள் வீழ்த்திய சாஹல் பல சாதனைகள் படைத்துள்ளார். அவை வருமாறு:-

1. ஐ.பி.எல்.வரலாற்றில் அதிக முறை 4 விக்கெட்கள் கைப்பற்றிய பந்துவீச்சாளராக சாதனை படைத்துள்ளார்.

1. யுஸ்வேந்திர சாஹல் - 9 முறை,
2. சுனில் நரைன் - 8 முறை,
3. லசித் மலிங்க - 7 முறை,
4. ரபாடா - 6 முறை.

2. ஒரே ஓவரில் அதிக முறை 4 விக்கெட்கள் கைப்பற்றிய வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார்.

அந்த பட்டியல் வருமாறு,

1. சாஹல் - 2 முறை
2. அமித் மிஸ்ரா, ரஸல் - ஒரு முறை.

3. ஐ.பி.எல். வரலாற்றில் அதிக முறை ஹட்ரிக் விக்கெட்கள் கைப்பற்றிய 2ஆவது வீரர் என்ற யுவராஜ் சிங்கின் சாதனையை சமன் செய்துள்ளார்.

அந்த பட்டியல் வருமாறு,

1. அமித் மிஸ்ரா - 3 முறை,
2. யுவராஜ் சிங், சாஹல் - 2 முறை.

4. பஞ்சாப் அணிக்காக ஹட்ரிக் விக்கெட் கைப்பற்றிய 4ஆவது பந்துவீச்சாளர் என்ற சாதனையை சாஹல் படைத்துள்ளார்.

அந்த பட்டியல் வருமாறு,

1. யுவராஜ் சிங் - 2 முறை
2. அக்சர் பட்டேல், சாம் கரன், சாஹல் - ஒரு முறை.



## மட்ரிட் ஓபின் ரென்னிஸ் காலிறுதியில் முசெட்டி

மட்ரிட், மே 02

மட்ரிட் ஓபின் ரென்னிஸ் தொடரில் லோரென்சோ முசெட்டி காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

ஸ்பெயினில் நடைபெற்று வரும் மட்ரிட் ஓபின் ரென்னிஸ் தொடர் விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 4ஆவது சுற்றில் இத்தாலி வீரரான லோரென்சோ முசெட்டி, அவுஸ்திரேலியாவை சேர்ந்த அலெக்ஸ் டி மினார் உடன் மோதினார்.

இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய லோரென்சோ முசெட்டி 6-4 மற்றும் 6-2 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்களுக்கு...

சுற்றறிக்கைகள் மூலம் எமக்குக் கிடைத்த சலுகைகளை நாம் விட்டுக் கொடுத்துள்ளோம். எங்களுக்கு சிறிது அவகாசம் தாருங்கள். நீங்கள் தெருவில் இறங்கி எங்களை கட்டாயப்படுத்த வேண்டியதில்லை" - இவ்வாறு மக்கள், தொழிற்சங்கங்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கா.

கொழும்பு - காலிமுகத்திடலில் நேற்று நடந்த மே தினக்கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"நாட்டில் தற்போது ஒரே அரசியல் சக்தியாக தேசிய மக்கள் சக்தி மட்டுமே உள்ளது. நாட்டின் எதிர்காலமும் அதன் மக்களும் தேசிய மக்கள் சக்தியையே நம்பியுள்ளனர். தேசிய மக்கள் கட்சிக்கு வெளியே எந்த சவாலும் இல்லை. அந்த சவால் தேசிய மக்கள் சக்தி கட்சிக்குள்ளேயே உள்ளது. முரண்பாடுகளை எதிர்கொள்வதும் புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாறிக்கொள்வதும் நமது சவால்.

ஆறு மாதங்களுக்குள் யாரும் விளைவுகளை எதிர்பார்க்க முடியாது. சரியான திட்டத்துடன் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு அரசாங்கம் வலுவான அடித்தளத்தை அமைத்துள்ளது. எனவே, தொழிற்சங்கங்கள் தங்கள் பழைய மனப்பான்மைகளை கைவிட்டு, நாட்டைக் கட்டியெழுப்பும் முயற்சியில் அரசாங்கத் துடன் இணைய வேண்டும் - என்றும் கூறினார். (ஐ)

## 40.7 ஏக்கர்...

பிரிவின் கீழ் கற்கோவளத்திலிருந்து 5.7 ஏக்கர் காணிகளுமே இவ்வாறு விடுவிக்கப்பட்டன.

உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்து இந்தக் காணிகளை விடுவித்தமைக்கான பத்திரங்களை இராணுவத்தின் யாழ். மாவட்ட கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் ஜகம்பத் யாழ். மாவட்ட அரச அதிபர் ம. பிரதீபனிடம் உத்தியோக பூர்வமாகக் கையளித்தார்.

இந்த நிகழ்வில், மேலதிக அரச அதிபர் (காணி) சிறீ மோகன், தெல்லிப்பழை, பருத்தித்துறை பிரதேச செயலர்கள் உள்ளிட்ட அதிகாரிகளும் பங்கேற்றிருந்தனர்.

இதேசமயம், குறித்த காணிகளில் வெடிபொருட்கள் அபாயம் தொடர்பில் ஆராயப்பட்ட பின்னர் மக்கள் அங்கு செல்ல அனுமதிக்கப்படுவர் என்று படைத் தரப்பு தெரிவித்துள்ளது. (ஐ-02-05)

## முள்ளிவாய்க்கால்...

விதமாக முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்படுகிறது.

இந்த நிலையில், தமிழின அழிப்பு மாதமான மே மாதத்தின் முதல்நாளான நேற்று கிளிநொச்சி - இரத்தினபுரத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது. (ஐ)

## நல்லை...

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் இரண்டா வது குருமகா சந்நிதானமான ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளின் இயற்பெயர் சுந்தரலிங்கம் என்பதாகும். நல்லூரை சொந்த இடமாகக் கொண்ட இவர் 1970களின் ஆரம்பத்தில் நல்லை ஆதீன முதலாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகளால் துறவறம் வழங்கப்பட்டு, ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் என்ற நாமம் பெற்றார்.

1981ஆம் ஆண்டு முதலாவது குருமகா சந்நிதானம் சமாதி நிலையை அடைந்தமையை தொடர்ந்து, நல்லை ஆதீனத்தின் இரண்டாவது குருமகா சந்நிதானமாக பட்டம்சூடினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## உள்ளூராட்சி...

இதனைத் தெரிவித்தார்.

மேலும், யாழ்ப்பாணத்தில் ஒரு மாநகர சபை 3 நகர சபைகள், 13 பிரதேச சபைகள் என்ற அடிப்படையில் 17 உள்ளூர் அதிகார சபைகள் இருக்கின்றன. இவற்றுக்கு 243 வட்டாரங்களில் இருந்து உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 3 ஆயிரத்து 519 வேட்பாளர்கள் அரசியல் கட்சிகள், சுயேச்சை குழுக்களில் போட்டியிடுகின்றனர்.

யாழ். மாவட்டத்தில் மக்கள் வாக்களிப்பதற்காக 517 வாக்களிப்பு நிலையங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. இவற்றை தயார் செய்ய பிரதேச செயலாளர்களுக்கும் கிராம அலுவலர்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. இதேநேரம், 4 இலட்சத்து 98 ஆயிரத்து 140 வாக்காளர்கள் இந்தத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர்.

அத்துடன், தேர்தல் கடமைகளுக்காக 6 ஆயிரத்து 320 அதிகாரிகளும் ஆயிரத்து 48 பொலிஸ் உத்தியோகத்தர்களும் கடமையாற்றவுள்ளனர்.

எதிர்வரும் 5ஆம் திகதி காலை 08 மணியிலிருந்து யாழ். மத்திய கல்லூரியில் இருந்து வாக்குப் பெட்டிகள், வாக்குச் சீட்டுகள் உள்ளிட்ட ஆவணங்கள் பேருந்துகள் மூலமாக குறித்த வாக்களிப்பு நிலையங்களுக்கு கொண்டு செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் 243 வாக்கெண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தேர்தலுக்கான இணைப்பு அலுவலகங்களாக பிரதேச செயலகங்கள் செயல்படவுள்ளன. அத்துடன், 243 இணைப்பு வட்டார உதவி தேர்தல் அத்தியட்சகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் வாக்களிப்பு நிறைவுற்றதும் வாக்கெண்ணும் நிலையங்களின் பிரதம அதிகாரிகளாக செயல்படுவர்.

அத்துடன், தேர்தலுக்கான போக்குவரத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இலங்கை போக்குவரத்து சபையின் 50 பேருந்துகளும் 143 தனியார் பேருந்துகளும் இந்த சேவையில் ஈடுபடும்.

இதேவேளை பருத்தித்துறை பிரதேசத்தில் உள்ள இடம்பெயர்ந்தவர்களை ஏற்றி வருதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுபோல, நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, எழுவைதீவு பகுதிகளுக்கு கடற்படை தளபதியுடன் கலந்துரையாடி போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேநேரம் 28, 29ஆம் திகதிகளில் நடைபெற்ற தபால் மூல வாக்களிப்பு 292 நிலையங்களில் நடைபெற்றது. 21 ஆயிரத்து 64 பேர் அஞ்சல் மூலம் வாக்களிக்க தகுதி பெற்றிருந்தனர். 20 ஆயிரத்து 659 வாக்குச் சீட்டுகள் கிடைத்தன. இதில், 20 ஆயிரத்து 548 வாக்களிக்கப்பட்டவை. 111 வாக்களிக்கப்படாத வாக்குச் சீட்டுகள். மேலும் 405 வாக்குச் சீட்டுகள் எமக்கு கிடைக்கப்பெற வேண்டும். இவை நாளையதினம் (இன்று) கிடைக்கப்பெறும். இவை எதிர்வரும் 5ஆம் திகதி சிரேஷ்ட தலைமை தாங்கும் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படும். அவற்றை அவர்கள் 6ஆம் திகதி வாக்கெடுப்பு நிலையங்களுக்கு கொண்டு சென்று அன்றிரவு வாக்கெண்ணும் நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள். 50இற்கும் குறைவான வாக்குப் பெட்டிகள்வாக்கெண்ணும் நிலையங்களில் எண்ணப்படும். 50இற்கு அதிகமான வாக்கு பெட்டிகள் வாக்கெண்ணும் நிலையத்தில் தனியான நிலையத்தில் கணக்கெடுக்கப்படும்.

இதேநேரம், உள்ளூராட்சி தேர்தல் தொடர்பில் மாவட்டத்தில் 94 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. இதில், 4 வன்முறை சம்பங்களும் 90 விதிமீறல்களும் அடங்கும். இவை தொடர்பில் மாவட்ட தேர்தல் ஆணைக்குழு விசாரணைகளை நடத்தி வருகிறது - என்றார். (ஐ)

## தமிழ் அரசுக் கட்சியுடன்...

நேற்றையதினம் வடமராட்சி - நெல்லியடி - மாலைசந்தியில் தமிழ்த் தேசிய பேரவை நடத்திய மே தினக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

இந்த உள்ளூராட்சி சபைகள் தேர்தலில் தமிழ் மக்கள் மிகத் தெளிவாக - ஆணித்தரமாக தங்கள் வாக்குகளை செலுத்தாது விட்டால் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை கைவிட்டுவிட்டார்கள் என்று சந்தேகிக்கப்படுவது உறுதியானதாகி விடும். ஒரு முறை மாறிப் போடலாம் - அதை நியாயப்படுத்தலாம். அடுத்தடுத்த தேர்தல்களிலும் இவ்வாறு நடந்தால் அதனை நியாயப்படுத்த முடியாது. அந்த வகையில் இது சாதாரண உள்ளூராட்சி தேர்தல் அல்ல. முகங்களுக்கு வாக்களிக்கும் இந்தத் தேர்தல்தான் தமிழ் மக்கள் தங்களின் அரசியல் அபிலாசைகளை வெளிப்படுத்தும் தேர்தலாக மாறியுள்ளது. இது கஷ்ட காலமாகும். எனவே, எமது மக்கள் ஆழமாக சிந்தித்து எமது வாக்குகளை செலுத்த வேண்டும்.

தமிழ்த் தேசத்தைப் பொறுத்த வரையில் இன்று இரு முக்கியமான விடயங்கள் உள்ளன. ஒன்று இனப்படுகொலைக்கு பொறுப்புக்கூறல் மற்றது இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணுதலாகும். இந்த விடயங்களில், ஜே. வி. பி. என்ற தேசிய மக்கள் சக்திக்கும் இதற்கு முன்னர் ஆட்சி செய்த இனவாத கட்சிகளுக்கும் இடையே எந்த வித்தியாசமும் இல்லை.

நாம் தமிழ் அரசுக் கட்சிக்கு எதிரானவர்கள் அல்லர். தலைமைத்துவம் தவறாக நடப்பதால் ஒட்டுமொத்த கட்சியும் தவறான பாதை யில் கொண்டு செல்லும் நிலைமைதான் இன்றுள்ளது. அந்தக் கட்சிக்குள் இருக் கும் நேர்மை யானவர்கள் சரியான முடிவை எடுக்க இந்தத் தேர்தல் ஒரு சந்தர்ப்பமாக இருக்க வேண்டுமானால் - கட்சிக்குள் இருக்கும் அவர்கள் விவா தத்தை உரு வாக்க வேண்டுமானால் எந்தளவுக்கு தேசிய மக்கள் சக்தியை ஓரங்கட்ட வேண்டுமோ அதேயளவுக்கு தமிழ் அரசுக் கட்சியையும் ஓரங்கட்ட வேண் டும்.

அப்படி ஒரு தெளிவான பாடம் கற்பித்தால் மட்டும்தான் தமிழ் அரசுக் கட்சிக்குள் இருக்கக்கூடிய நேர்மையான உறுப்பினர்கள் மேலோங்க முடியும். தவறான தலைவர்களை வெளியேற்ற முடியும். இது தமிழ் அரசுக் கட்சியை தோற்கடித்து - முற்றுமுழுதாக ஓரங்கட்டும் செயல்பாடு அல்ல. அப்படி செய்ய முடியாது - செய்யவும் கூடாது. தமிழ் அரசுக் கட்சி தவறான கொள்கையை கைவிட்டு - அந்தக் கட்சியை நிறுவிய தந்தை செல்வநாயகத்தின் கொள்கையின்படி நேர்மையாக பயணிக்க முன்வந்தால் - அந்தக் கட்சியின் தவறான தலைமைத்துவத்தை மாற்றி - திருத்தி சரியான பாதைக்கு அவர்கள் வருவதாக இருந்தால் நாம் நிச்சயமாக அவர்களுடன் பேச்சு நடத்தி பொது இணக்கப்பாட்டுக்கு வந்து இணைந்து பயணிப்போம் - என்றார். (ஐ)

## கதிர்காம...

தலைமை தாங்கும் சுவாமிகளிடம் வேல் வழங்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து பாதயாத்திரை ஆரம்பமானது. பாதயாத்திரையை ஆரம்பித்த குழுவினருக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தில் காலை உணவு வழங்கப்பட்டு, ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகளால் ஆசீர்வாதமும் வழங்கப்பட்டது.

அங்கிருந்து பயணித்தவர்கள் அச்சுவேலியில் தங்கினர். இன்று காலை இந்த பாத யாத்திரை குழு தனது பயணத்தைத் தொடரும்.

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கதிர்காமம் கந்தன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் ஜூன் 26ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. இதில், தொண்டைமானாறு செல்வசந்நிதியான் ஆலயத்திலி ருந்து பாத யாத்திரையாக சென்று பக்தர்கள் பங்கேற்பது வழக்கம். யாழ்ப் பாணத்திலிருந்து ஆரம்பமாகும் இந்தப் பாத யாத்திரை கிளிநொச்சி, முல்லைத் தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, மொனராகலை மாவட்டங்கள் ஊடாக 815 கிலோமீற்றர் தூரத்தைக் கடந்து கதிர்காமம் ஆலயத்தை கொடியேற்ற நாளன்று சென்றடையும். இந்தப் பாத யாத்திரையில் ஒவ்வொரு இடத்திலிருந்தும் பக்தர்கள் சேர்வார்கள். இவ்வாறு சேரும் பக்தர் கூட்டம் கதிர்காமத்தை அடையும்போது பல்லாயிரக்கணக்கில் இருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## காணி...

உரிமை உண்டு என்று ஜே. வி. பி. தலைவர் றோகண விஜயவீர கூறியுள்ளார். நீங்கள் உண்மையான இடதுசாரிகள் என்றால் தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்று சொல்லுங்கள். இல்லலாவிட்டால் சிவப்பு சட்டை அணிவதில் அர்த்தமில்லை எனவும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று கட்சியின் சார்பில் நடந்த மே தினக் கூட்டத்தில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

ஆட்சியிலுள்ள அநுர குமார தரப்பினர் தொடர்ச்சியாக பொய் வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றி வருகின்றனர். இவ்வாறு கடந்த காலங்களில் ஏமாற்றியவர்களுக்கு என்ன நடந்தது என்பது அனைவருக்கும் தெரியும். குறிப்பாக, கோட்டாபய ராஜபக்ஷ 51 சதவீதத்துக்கு மேல் வாக்கெடுத்து ஜனாதிபதியானபோதும் அதே மக்களால் துரத்தியடிக்கப்பட்டதைப் பார்த்திருந்தோம். சிங்கள மக்களாலேதான் நான் வந்தேன் எனக் கூறிக் கொண்டிருந்த கோட்டாபயவுக்கே இந்தக் கதி என்றால், வெறுமனே 42 சதவீத வாக்கில் வந்த உங்களுக்கு என்ன நடக்குமோ...? உங்கள் வழியை நீங்கள் சரி செய்யாவிடின் உங்களுக்கும் இதுதான் நடக்கலாம் - என்றார்.

இதேவேளை, கடந்த 28.03.2025 திகதியிட்ட 2430 இலக்கமிட்ட வர்த்தமானியில் "யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவில் 5 ஆயிரத்து 940 ஏக்கர் காணிகளை 3 மாதங்களுக்குள் எவரும் உரிமை கோராவிட்டால் அரச காணிகளாக பிரகடனப்படுத்தப்படும்", என்று அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## காங்கேசன்...

குறைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாகபட்டினத்தில் அவர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவற்றைத் தெரிவித்தார்.

காங்கேசன்துறை - நாகபட்டினம் இடையே பயணிகள் கப்பல் சேவைக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. இந்நிலையில், கப்பல் பயணிகளுக்கு உதவும் வகையில் 8 ஆயிரத்து 500 இந்திய ரூபாய் (இலங்கை மதிப்பில் சுமார் 30 ஆயிரம் ரூபாய்) கட்டணத்தை 8 ஆயிரம் இந்திய ரூபாயாக (சுமார் 28 ஆயிரத்து 300 ரூபாய்) குறைக்கப்பட்டுள்ளது.

மேலும், பயணிகள் 10 கிலோ எடையுடைய உடைமைகளை மட்டுமே கப்பலில் எடுத்துச்செல்ல அனுமதிக்கப்பட்ட நிலையில், அதனை 7 கிலோ கைப்பை எடையாகவும் 15 கிலோ மேலதிக எடையாகவும் கொண்டு செல்ல அனுமதித்துள்ளோம்.

இது தவிர, 15 ஆயிரம் இந்திய ரூபாய்க்கு (சுமார் 53 ஆயிரத்து 200 ரூபாய்) 2 இரவுகள் பயணம் உட்பட மூன்று நாள் கொண்ட சுற்றுலா திட்டம், 30 ஆயிரம் ரூபாய்க்கு (சுமார் ஒரு இலட்சத்து 6 ஆயிரத்து 400 ரூபாய்) 5 இரவுகள் 6 நாள் கொண்ட சுற்றுலா திட்டம்என்பன அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன - என்றும் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# பஸ் கட்டணத்தில் மாற்றம் இல்லை!

கொழும்பு, மே 02

டீசல் விலையானது குறைக்கப்பட்டபோதிலும் பஸ் கட்டணத்தை மாற்றியமைக்கப் போவதில்லை என்று இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இந்த நேரத்தில் பஸ் கட்டணத்தைக் குறைப்பதற்கான சாத்தியக்கூறு இல்லை.

விலைச் சூத்திரம் 20 ஆண்டுகளாக நடைமுறையில் உள்ளது என்பதை பொதுமக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

அதற்கு மாறாக நாங்கள் செயல்படவில்லை.எனவே, இந்த நேரத்தில் பஸ் கட்டணத்தைக் குறைப்போம் என்று யாரும் எதிர்பார்க்கக்கூடாது.

எரிபொருள் விலை மட்டும் பஸ் கட்டணங்களைப் பாதிக்கும் ஒரே காரணியல்ல. ஏனைய அனைத்து செலவுகளும் அதிகரித்துள்ளன-என்றார். (அ)

# கொழும்பு துறைமுகத்தில் விரைவில் இந்திய போர்க்கப்பல் தொழிற்சாலை!

## புபுது ஜாகொட தகவல்




கொழும்பு, மே 02

கொழும்புத் துறைமுகத்தில் போர்க்கப்பல் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல் தொழிற்சாலையை நிறுவ இந்தியா தயாராகி வருவதாக முன்னணி சோசலிசக் கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜாகொட தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் இந்தியாவுடன் கையெழுத்தான ஒப்பந்தங்களை திசைகாட்டி அரசாங்கத்தின் அமைச்சர்களில் முக்கியமானவர்கள் பார்க்கவில்லை என்றும் அவர் கூறினார்.

அவருடன் தனிப்பட்ட தொடர்புகளை கொண்ட பல அமைச்சர்கள் இதை உறுதிப்படுத்தியுள்ளதாகவும் புபுது ஜாகொட தெரிவித்தார்.

இந்தியாவுடன் கையெழுத்தான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை ஏழு என்று அரசாங்கம் கூறியிருந்தாலும், இந்திய ஊடகங்கள் 10 என்று கூறியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், இலங்கையில் இந்திய இராணுவ ஆயுதத் தொழிற்சாலைகள் மற்றும் ஆயுதக் கிடங்குகளை நிறுவுவது குறித்த விவரங்களை இந்திய பாதுகாப்புச் செயலாளரே இந்திய ஊடகங்களுக்கு வெளிப்படுத்தியதாகவும் புபுது ஜாகொட சுட்டிக்காட்டினார். (அ)

# ஓட்டோ கட்டணம் மாறாது!

கொழும்பு, மே 02

எரிபொருள் விலை குறைக்கப்பட்டபோதிலும், கட்டணங்களை மாற்றியமைக்க மாட்டோம் என்று அகில இலங்கை ஓட்டோ ஓட்டுநர்கள் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, எரிபொருள் விலை திருத்தம் தொடர்பாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.எரிபொருள் விலைகள் நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டன.

92 ஒக்ரேன் பெற்றோல் லீற்றரின் விலை 6 ரூபாவினாலும் , 95 ஒக்ரேன் பெற்றோல் லீற்றருக்கு 20 ரூபாவினாலும், டீசல் லீற்றருக்கு 12ரூபாவினாலும், சூப்பர் டீசல் லீற்றருக்கு 6 ரூபாவினாலும், மண்ணெண்ணெய் லீற்றருக்கு 5 ரூபாவினாலும் குறைக்கப்படும் என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளமை குறிப்பிப்பிடத்தக்கது. (அ)

# அரசுக்குள்ளே டீசல் மாபியா!

## குற்றம்சாட்டுகிறார் நாமல்



கொழும்பு, மே 02

**அரசாங்கத்தில் உள்ள சிலர் பணம் ஈட்டும் நோக்கில் தற்போது டீசல் மாபியாவை ஏற்படுத்தி வருவதாக, பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

அளவ்வ பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில் - ஜே.வி.பி அரசாங்கம் 76 வருடங்களாக நாட்டில் இடம்பெற்ற வேலைத் திட்டங்களைச் சீரழிக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதே தவிர, புதிய வேலைத் திட்டங்கள் எதனையும் முன்னெடுக்கவில்லை.

பல இடங்களில் உண்மைக்குப் புறம்பான விடயங்களைக் கூறி வருகின்றனர். தேர்தலுக்குப் பின்னர் நிச்சயமாக தற்போதைய அரசாங்கம் மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்கும்.

அதே போன்று, அரசாங்கம் டீசல் மாபியாவை உருவாக்கும் வேலைத் திட்டத்தையும் முன்னெடுத்துள்ளது.

எனவே, இதன் பாதிப்பு பொது மக்களையே சென்றடையும். இவ்வாறான மாபியா நடவடிக்கைகளுக்கு இடமளிக்கக் கூடாதென அரசாங்கத்திடம் கோருகிறோம் - என்றார். (அ)

# சப்ரகமுவ பல்கலை மாணவன் பகிடிவதையால் உயிர்மாய்ப்பு!

கொழும்பு, மே 02

பகிடிவதையால் அவமானம் தாங்க முடியாது மன முடைந்த பல்கலைக்கழக மாணவர் ஒருவர் உயிரை மாய்த்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உயிர் மாய்த்த செய்து கொண்ட மாணவர் சப்ரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப பொறியியல் பீடத்தில் இரண்டாம் ஆண்டில் படிக்கும் 23 வயதுடைய சரித் தில்ஷான் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கடந்த 27 ஆம் திகதி பல்கலைக்கழகத்தில் நடை பெற்ற புத்தாண்டுக் கொண்டாட்டத்துக்குப் பின்னர், அவர் 28 ஆம் திகதி கம்பளை, இஹலகமவில் உள்ள தனது வீட்டுக்குத் திரும்பியுள்ளார்.

பின்னர், ஏப்ரல் 29 ஆம் திகதி மாலை தனது வீட்டின் பின்புறம் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளமை தெரியவந்துள்ளது.

பல்கலைக்கழக புத்தாண்டுக் கொண்டாட்டத்தின் போது அவருக்கு ஏற்பட்ட தாங்க முடியாத அவமானமே அவரது தற்கொலைக்கு வழிவகுத்ததாக அவரது உறவினர்கள் மற்றும் நண்பர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இதேவேளை, கடந்த இரண்டு வருடங்களாக சப்ரக முவ பல்கலைக்கழக மாணவர்களால் தனது மகன் பல் வேறு வகையான துன்புறுத்தல்களுக்கு ஆளானதாக சரித்தின் தந்தை குற்றம் சாட்டினார். (அ)

# கோடரியால் தாக்கி ஒருவர் படுகொலை!

## சந்தேக நபர் கைது

கொழும்பு, மே 02

மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த நபர் கோடரியால் தாக்கிக் கொலை செய்யப்பட்டதாக லுணுகம்வெஹெர பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணை செய்யப்பட்டதில் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் நேற்று புதன்கிழமை இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.உயிரிழந்தவர் லுணுகம் வெஹெர, அக்கரகல்கொட பகுதியைச் சேர்ந்த 67 வயதுடையவர் என தெரியவந்துள்ளது.

அந்த நபர் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது, பின்னால் வந்த கப் வண்டி மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது காயமடைந்த நபரை சந்தேக நபர் கோடரியால் தாக்கிக் கொலை செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய 27 வயது சந்தேக நபர் கொலைக்குப் பயன்படுத்தப்பட்ட கோடரியுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த கொலை தொடர்பான மேலதிக விசாரணைகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (அ)

# பிரேமதாஸவின் சிலைக்கு அஞ்சலி



கொழும்பு, மே 02

32 ஆண்டுகளுக்கு முன்பு மே தின ஊர்வலத்தின் போது குண்டுவெடிப்பில் படுகொலை செய்யப்பட்ட மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவை கௌரவிக்கும் வகையில் நேற்று நினைவு நாள் நிகழ்வு நடைபெற்றது.

கொழும்பில் உள்ள ஹல்ப்ஸ்டோர்ப் நீதிமன்ற வளாகத்திற்கு அருகில் இந்த சம்பவம் நடந்தது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, முன்னாள் முதல் பெண்மணி ஹேமா பிரேமதாஸ மற்றும் பல பாராளுமன்ற உறுப்பினர்கள், சிறப்பு விருந்தினர்களுடன் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

கடந்த 1993 மே முதலாம் திகதியன்று ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டத்தின் போது நடந்த தற்கொலைக் குண்டுவெடிப்பில் ஜனாதிபதி பிரேமதாஸவும் 22 பேரும் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# துப்பாக்கிகளுடன் இருவர் கைது!

கொழும்பு, மே 02

நாட்டில் வெவ்வேறு பகுதிகளில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது துப்பாக்கிகளுடன் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்படி, பொலனறுவை அரலகங்வில பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிம்புரத்தேவ பகுதியில் துப்பாக்கியுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.கைது செய்யப்பட்டவர் பிம்புரத்தேவ பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞர் ஆவார்.

இதேவேளை, குருநாகல் - குளியாப்பிட்டி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பல்லேவெல பகுதியில் உள்நாட்டுத் துப்பாக்கியுடன் முதியவர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

# லாப்ஸ் எரிவாயுவின் விலை மாற்றமில்லை

கொழும்பு, மே 02

லாப்ஸ் எரிவாயு விலையில் எந்த திருத்தமும் மேற்கொள்ளப்படவில்லை என லாப்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

அதன்படி, 12.5 கிலோகிராம் எடையுள்ள லாப்ஸ் எரிவாயு கொள்கலனின் விலை 4,100 ரூபாவாகவும், 5 கிலோகிராம் எடையுள்ள லாப்ஸ் எரிவாயு கொள்கலனின் ஒன்றின் விலை 1,645 ரூபாவாகவும் விலை மாற்றமின்றி நிலவும் என அந்த நிறுவனம் அறிவித் துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.05.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.